செம்மையான வாழ்வுக்கு செங்கொடி காட்டும் பாதை!



மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 18வது மாநில மாநாடு

தீர்மானங்களும் - தீர்வுகளும்

முன்னுரை



என்.வரதராஜன்,
மாநில செயலாளர்,
சிபிஐ(எம்).

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 18வது தமிழ்நாடு மாநில மாநாடு நாகர்கோவில் நகரில் பிப்ரவரி 3ம் தேதி முதல் 6ந்தேதி வரை எழுச்சியோடு நடந்தேறியது. உள்கட்சி ஜனநாயகம் என்ற உயரிய கோட்பாட்டை அடி முதல் நுனி வரை முழுமையாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி செயல்படுத்தி வருகிறது. கட்சியின் கிளை மாநாடுகள் துவங்கி அகில இந்திய மாநாடு வரை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தொடர்ச்சியாக நடந்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக நடைபெற்ற கட்சியின் தமிழ்நாடு மாநில மாநாடு தமிழக மக்கள் சந்திக்கும் பல்வேறு பிரச்சனைகளை ஆழ்ந்த அக்கறையோடு விவாதித்தது. அதற்கான தீர்வுகள் குறித்து 25க்கும் மேற்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றி உள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்களை தமிழக மக்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானத்தில் மத்திய, மாநில அரசுகள் பின்பற்றும் மக்கள் விரோத பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. மத்தியில் அமைந்துள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள மக்களுக்குச் சாதகமான அம்சங்களை நிறைவேற்றுவதில் சுணக்கம் காட்டுவதைச் சுட்டிக்காட்டிய மாநாடு இதற்காக மக்களை அணி திரட்டிப் போராடுவது என்று முடிவு செய்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வி அடைந்த பிறகும் மாநில அதிமுக அரசு உரிய பாடத்தைப் பெறவில்லை. மக்களுடைய அடிப்படைப் பிரச்சனைகளில் கவனம் செலுத்த தொடர்ந்து மறுத்து வருகிறது. அதன் அடக்குமுறை அராஜகத் தர்பார் பல்வேறு வடிவங்களில் தொடர்கிறது. மக்களின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுகின்றன. வேலை நிறுத்த தடைச்சட்டமான டெஸ்மா புதுப்பிக்கப்பட்டுள்ளது. வரும் சட்டமன்றத்தேர்தலில் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, ஜனநாயக விரோத அதிமுக அரசை அகற்ற மக்கள் சக்தியை ஒன்றுபடுத்துவது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு முடிவு செய்துள்ளது.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்று பன்னெடுங் காலத்திற்கு முன்பே தமிழகத்தின் மதச்சார்பற்ற பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கும், நமது தாய்மொழியாம் தமிழ்மொழி தமிழகத்தில் அனைத்து துறைகளிலும் தலைமை தாங்க வேண்டுமென்றும், நமது மாநிலத்தில் விவசாயம், தொழில் மற்றும் கல்வி, பண்பாட்டுச் சூழல் குறித்து விரிவாக விவாதித்த மாநாடு ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை முன்வைத்துள்ளது. சமூகத்தில் ஒடுக்கப்பட்டுள்ள தலித், பழங்குடியினர் மற்றும் பெண்களின் வாழ்வில் முன்னேற்றம் காண்பதற்கான தீர்வுகளும் முன்மொழியப்பட்டுள்ளன. இந்தத் தீர்மானங்களுக்கு செயல்வடிவம் தர கட்சி அயர்வின்றி போராடும்.

மாநாட்டில் கட்சியின் அகில இந்திய தலைவர்கள் ஆற்றிய உரையில் ஒருசில பகுதிகளும் இந்த சிறு பிரசுரத்தில் இணைக்கப்பட்டுள்ளது. மக்கள் பிரச்சனைகளில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பார்வையை புரிந்து கொள்ள இந்த சிறு நூல் உதவுமென்று நம்புகிறோம். போராட்டப் பாதையில் அணிவகுத்திட தமிழக மக்களை அழைக்கிறோம்.

தீர்மானம் - 1

மக்களைப் பாதிக்கும் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து போராடுவோம்!

அடக்குமுறை அதிமுக அரசை தூக்கியெறிவோம்!

சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியை சீற்றத்துடன் மக்கள் தூக்கியெறிந்தனர். மக்களின் வாழ்க்கையை நாசப்படுத்தி சீரழிக்கிற உலகமய, தாராளமய, தனியார்மய கொள்கைகளையும் மக்கள் ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கும் வகுப்புவாத கொள்கைகளையும் மக்கள் அழுத்தம், திருத்தமாக நிர்ராகரித்தனர்.

தமிழகத்திலும், புதுவையிலும் உள்ள 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் அதிமுக-பிஜேபி கூட்டணி வரலாறு காணாத தோல்வியைத் தழுவியது. தமிழகத்தில், இதில் அடங்கிய ஒரே ஒரு சட்டமன்றத் தொகுதியைத்தவிர இதர அனைத்துத் தொகுதிகளிலும் அதிமுக கூட்டணி தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

ஆட்சிப்பொறுப்பிற்கு வந்ததிலிருந்து - இலவச மின்சாரம் ரத்து, பஸ்கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு, ரேசன் விநியோகத்தை வெட்டியது, மாணவர் பஸ் பாஸ் ரத்து, மதமாற்றத் தடைச்சட்டம், பொடா துஷ்பிரயோகம்,ஆடு-கோழி பலியிடத்தடை, தொழிலாளர் களின் உரிமைகளும் சலுகைகளும் பறிப்பு, அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு எதிரான தாக்குதல், வேலை நிறுத்த தடைச்சட்டம், அரசியல் தலைவர்கள் மற்றும் பத்திரிகைகள் மீது பொய் வழக்குகள், அனைத்து ஜனநாயக உரிமைகளையும் உதாசீனப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை அடுக்கடுக்காகவும், அதிரடியாகவும் அதிமுக அரசு மேற்கொண்டது.

இந்த நடவடிக்கைகளை எதிர்த்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், வெகுஜன இயக்கங்களும், தொடர்ந்து வலுவான

கிளர்ச்சிகளை சமரசமற்று நடத்தின. ஆட்சிக்கு எதிரான மக்களின் கோபமும், வலுவான எதிர்ப்பு அணியும் அதிமுக- பிஜேபி அணியின் படுதோல்வியை உறுதிப்படுத்தின.

டில்லியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் இடதுசாரி ஜனநாயக சக்திகள் விரும்பிய வண்ணம் வகுப்புவாத சக்திகளை பின்னுக்கு தள்ளி உள்ளது. அனைத்து ஆட்சித் துறைகளிலும் திணிக்கப்பட்டுள்ள வகுப்புவாத விஷத்தை முறிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

மத்தியில் உள்ள காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி பொருளாதார கொள்கைகள் விஷயத்தில் பழைய தவறான பாதையிலேயே நடைபோடுகிறது.

குறைந்தபட்ச பொதுத்திட்டத்தில் உள்ள மக்களுக்குச் சாதகமான அம்சங்களைக்கூட நிறைவேற்ற மறுக்கிறது. பொதுத்துறை பங்குகளை விற்பது, ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த தொலைத்தொடர்பில் கூட அன்னிய மூலதனத்தை அனுமதிப்பது, காப்புரிமைச்சட்டத்தை நாட்டு நலனுக்கு விரோதமாக திருத்தியது, பெட்ரோல், டீசல் விலையேற்றம் போன்றவை தொடருகின்றன.

மத்திய அரசில் இடம்பெற்றுள்ள திமுக, பாமக கட்சிகளும் ஐக்கிய முற்போக்கு அணியில் உள்ள மதிமுகவும் மத்திய அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்துப்போராட முன்வர வேண்டும்.

மாநிலத்தில் ஆளும் அதிமுக அரசு, தேர்தல் தோல்விக்குப்பிறகும் உரிய பாடம் பெறவில்லை. இப்போது மக்களை ஏமாற்றும் சாகசத்தில் இறங்கியிருக்கிறது. மாநில பொதுத்துறைகளை சீரழிப்பதும், தனியார்மய முயற்சியும் தொடருகிறது. கல்வி, சுகாதாரம், குடிநீர், கழிவுநீர் அகற்றல் போன்ற அனைத்து அடிப்படைப் பிரச்சனைகளும் ஏழைகளுக்கு எட்டாத கட்டண முறைக்கு ஆளாகின்றன.

விவசாய விளைபொருட்களின் விலை வீழ்ச்சி, தொடர் வறட்சியிலும் இடு பொருட்களுக்கான மானியங்கள் வெட்டு, கூட்டுறவு மற்றும் அரசு வங்கிகளில் கடன் மறுப்பது, விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை முடக்கியது போன்ற இந்த அரசின் கொள்கைகளால் விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் வாழ்விழந்து தவிக்கின்றனர். பஞ்சம் பிழைக்[illegible]ண்கள் மட்டும் வெளியூர் சென்ற நிலை மாறி குடும்பத்தோடு [illegible]டம் பெயர்கிற கொடுமை நடைபெறுகிறது.

சட்டம்-ஒழுங்கு கெட்டுப்போய் இருக்கிறது. கொலைகளும், கொள்ளைகளும்அதிகரித்துவிட்டன. பெண்களுக்கு எதிரான

கொடுமைகள் பெருகிவருகின்றன.

அரசு, மக்களுக்கான சட்டங்களையும் மதிப்பதில்லை. நீதிமன்ற தீர்ப்புகளையும் மதிப்பதில்லை. நீதிமன்ற தீர்ப்பிற்குப் பிறகும் சாலைப் பணியாளர்களுக்கு வேலை தர மறுப்பது ஒரு உதாரணம்.

ஊர்வலம், உண்ணாவிரதம் உள்ளிட்ட அனைத்து ஜனநாயக உரிமைகளும் நசுக்கப்படுகின்றன.

விலையேற்றமும், முடங்கிக் கிடக்கும் சிறு தொழில்களும், பாதிக்கப்பட்டுள்ள பாரம்பரியத் தொழில்களும் உழைப்பாளி மக்களின் வாழ்வை உருக்குலைத்து விட்டன. நவீன தொழில் வளர்ச்சியும் வேலை வாய்ப்பை அதிகரிக்கவில்லை. அரசே தனது தொழில்களில் வேலை நியமன தடையை விதித்துள்ளது.

வேலை நிறுத்த தடைச்சட்டமான டெஸ்மா புதுப்பிக்கப் பட்டுள்ளது. மொத்தத்தில் ஜனநாயக போர்வையில் ஒரு அடக்குமுறை ஆட்சியே நிலவுகிறது.

இந்த நிலையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில 18வது மாநாடு

* *தமிழகத்தில் மதக்கலவரம் மூலம் பலம் பெறத்துடிக்கும் பிஜேபி, ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் மற்றும் இதர வகுப்பு வாத அமைப்புகளின் முயற்சிகளை முறியடித்து மக்கள் ஒற்றுமையைக் காப்பது எனத் தீர்மானிக்கிறது.*

* *மாநிலத்தில் நிலவும் சாதீய ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும், தீண்டாமை உள்ளிட்ட சமூகக் கொடுமைகளை வேரறுக்கவுமான போராட்டத்தை உறுதியுடன் தொடருவது எனத் தீர்மானிக்கிறது*

* *மத்திய அரசின் மக்களுக்கு எதிரான பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து மக்களைத் திரட்டி போராடுவது என தீர்மானிக்கிறது.*

* *மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, ஜனநாயக விரோத அடக்குமுறை அதிமுக அரசை அடுத்த தேர்தலில் தூக்கியெறிவதற்கு மக்கள் சக்தியை ஒன்றுபடுத்துவது எனத் தீர்மானிக்கிறது.*

* *இந்த கடமைகளை நிறைவேற்றுவதற்கு தனியாகவும், இடதுசாரி மற்றும் இதர ஜனநாயக அரசியல் சக்திகளோடு இணைந்தும் அவசியமான கிளர்ச்சிகளையும், போராட்டங்களையும் முன்னெடுத்துச் செல்வதெனத் தீர்மானிக்கிறது.*
* *மக்களின் அடிப்படை பிரச்சனைகளிலிருந்து திசை திருப்பும் முயற்சிகள் அனைத்தையும் புறம் தள்ளி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மேற்கண்ட அரசியல் அறைகூவலை நிறைவேற்ற அணி திரளுமாறு தமிழக மக்களை 18வது மாநாடு கேட்டுக்கொள்கிறது*

தீர்மானம் - 2

தமிழகத்தின் மதச்சார்பற்ற பாரம்பரியத்தைப் பாதுகாப்போம்!

தமிழகம், மத நல்லிணக்க பாரம்பரியம் கொண்டது; மதச்சார்பற்ற உணர்வுகளும், ஒற்றுமை- மனிதநேயம்-பகுத்தறிவுபோன்ற மாண்புகளும் வேரூன்றியுள்ள தமிழகத்தில் மதவெறி சக்திகள் தற்போது தீவிரமாக பணியாற்றுவது கவலையளிக்கும் நிகழ்வாகும்.

சிறுபான்மை மக்களை இந்துக்களின் எதிரிகளாக சித்தரித்து மதவெறியூட்டுவது, சங்பரிவாரங்களின் பாணி. அரசியல் களத்தில் பா.ஜ.க.வும் இதர சங்பரிவார அமைப்புகளும் தமிழகத்தில் எழுகிற அனைத்துப் பிரச்சனைகளையும் மதவெறிக் கண்ணோட்டத்தில் திசை திருப்பி வருகின்றன.

கொலைக் குற்றம் உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்ட சங்கர மடாதிபதி ஜெயேந்திரர் மற்றும் விஜயேந்திரர் மீதான கிரிமினல் நடவடிக்கைகளை இந்து மதத்தின் மீதான தாக்குதல்

என்ற விஷமத்தனமான பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றன.

சிறுபான்மையினர் சிலரிடையே வளர்ந்து வரும் மதவெறிப் போக்குகள் கவலையளிப்பதாகும். சில இஸ்லாமிய இளைஞர்கள் மதவெறி சிந்தனைக்கு இரையாகி, தீவிரவாத இயக்கங்களை தமிழகத்தில் வளர்த்திட கருவிகளாய் பயன்படுகின்றனர்.

தமிழக மக்களில் பல பிரிவினர் பல்வேறுபட்ட பண்பாடு, கலாச்சார வாழ்க்கை முறைகளையும் வேறுபட்ட வழிபாட்டு முறைகளையும் கொண்டுள்ளனர். இந்த பன்முகப் பண்பாட்டை அழித்து, பழைய சனாதன, நால்வருண பண்பாட்டை புகுத்திடும் பாணியில் சங்பரிவாரங்கள் இயங்கி வருகின்றன. கடந்த காலத்தில் அதிமுக அரசு மதமாற்ற தடை, ஆடு-கோழி பலியிட தடை போன்ற சட்டங்களை கொண்டு வந்தது மதவெறி சக்திகளுக்கு தமிழகத்தில் ஊக்கப்படுத்தும் நிகழ்ச்சியாகும். இனி வரும் காலங்களில் அரசாங்கம் எவ்வகையிலும் மத விவகாரங்களில் தலையிடாமல், மதச்சார்பின்மை கொள்கையில் உறுதியாக இருக்க வேண்டும்.

பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை வகுப்புவாதம் என்ற இரண்டு ஆபத்தான மதவெறிப் போக்கையும் தமிழக மண்ணிலிருந்து அகற்றுவது தமிழக வளர்ச்சிக்கும் மக்கள் நலனுக்கும் அவசியமாகும்.

“யாதும் ஊரே, யாவரும் கேளீர்” என்ற செந்நெறி கண்டது தமிழகம். இங்கு மகாகவி பாரதி, தந்தை பெரியார், பாரதிதாசன் போன்றோர் மதத்தின் பெயரால் நிலவிய மூடத்தனங்களை எதிர்த்து, பகுத்தறிவுக் கொள்கைகளை பரவச் செய்தனர். சமூக பிரச்சனைகளுக்கு தீர்வுகாண முற்போக்கான அறிவியல் மற்றும் பகுத்தறிவு பார்வையின் மகத்துவத்தை தோழர்கள் ம.சிங்காரவேலர், ஜீவானந்தம், பி.சீனிவாச ராவ், பி.இராமமூர்த்தி போன்ற கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர்கள் பிரச்சாரம் செய்ததும், இந்த தமிழ் மண்ணில்தான்.

இந்த பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கும், தமிழகத்தில் மதவெறி நடவடிக்கைகளுக்கு இடமில்லை என்கிற நிலைமையை உருவாக்கவும் மதவெறி சக்திகளின் செயல்பாடுகளை விழிப்போடு இருந்து தடுத்திட தமிழக மக்களும், மதச்சார்பற்ற சக்திகளும் முன்வர வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 18வது தமிழ் மாநில மாநாடு கேட்டுக்கொள்கிறது.

தமிழுக்காக உரிமைக்குரல் எழுப்புவோம்!

தாய்மொழி வளர்ச்சிக்காகவும், மொழிகளின் சமத்துவத்திற்காகவும் பாடுபடுவது உழைப்பாளி மக்களின் நலன் சார்ந்ததாகும். அதனாலேயே அவற்றிற்கான போராட்டம் மார்க்சியத்தின் பிரிக்கவொண்ணா அங்கமாகத் திகழ்கிறது. தமிழகத்தில் அன்று ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் இயக்கமும், இன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் தமிழின் நியாயமான உரிமைகளுக்காக விடாது எழுச்சிக் குரல் கொடுத்து வந்துள்ளது.

இதில் அண்மைக்கால வெற்றி தமிழைச் செம்மொழியாக அங்கீகரிப்பது என்று ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு எடுத்துள்ள முடிவு. மத்திய அரசு எடுத்துள்ள இந்த முடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில 18வது மாநாடு உற்சாகத்தோடு வரவேற்கிறது. இதற்கான அரசு அறிவிப்பை உடனடியாக வெளியிட வேண்டுமென வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரை தமிழ் உரிய, உயரிய இடத்தில் அமர்த்தப்பட வேண்டும். வேதனையான விஷயம் என்னவென்றால் ஆங்கிலம் பயிற்று மொழியாக உள்ள பள்ளிகளில் தமிழ் ஒரு பாடமாகவே இல்லாத நிலையில் தமிழ் மொழியை கற்காமலேயே தமிழர் வீட்டுப் பிள்ளைகள் பள்ளிப் படிப்பை முடிக்க முடியும். இந்த அவல நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றும், தமிழ் அல்லது அவரவர் தாய் மொழியை ஒவ்வொரு மாணவனும் ஒரு பாடமாக படிப்பதை கட்டாயமாக்க தமிழக அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், பொறியியல், மருத்துவம் போன்ற உயர் படிப்புகளில் தமிழும் பயிற்று மொழியாக இருக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இந்த மாநாடு வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறது.

தமிழகத்தின் ஆட்சி மொழியாகத் தமிழ் அறிவிக்கப்பட்டு பல்லாண்டுகள் ஆகியும் அரசின் ஆணைகள், அறிவிப்புகள் பல இப்போதும் ஆங்கிலத்திலேயே வருகின்றன. மக்களுடனான அரசின்

அனைத்துத் தொடர்புகளும், செயல்பாடுகளும் தமிழில் நடத்தப்பட உடன் ஆவன செய்ய வேண்டும் என்று தமிழக அரசை இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது.

மேலும் தமிழகத்தில் உயர்நீதிமன்றம் மற்றும் அனைத்து மட்ட நீதிமன்றங்களை தமிழில் நடத்தச் செய்ய இயலும். இதற்கான தீர்மானத்தை தமிழக சட்டமன்றத்தில் அரசு நிறைவேற்ற வேண்டுமென்று மாநில அரசை இந்த மாநாடு வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறது. அரசியல் சாசனத்தின் எட்டாவது அட்டவணையில் உள்ள அனைத்து மொழிகளும் மத்தியில் சமமாக நடத்தப்பட வேண்டும். இது இந்திய ஒற்றுமைக்கு வலு சேர்க்கும். இந்த நோக்கில் நாடாளுமன்றத்தில் அனைத்து மொழிகளிலும் பேசுவதற்கு உடனுக்குடனான மொழிபெயர்ப்பு வசதி செய்ய வேண்டுமென்றும் மத்திய அரசின் அனைத்துப் பணிகளுக்கான தேர்வுகளும் அனைத்து தேசிய மொழிகளிலும் நடத்தப்பட வேண்டுமென்றும் இந்த மாநாடு கோருகிறது.

மத்திய, மாநில அரசுகள் முன்வந்து உரிய சட்டங்கள் நிறைவேற்றப் பட்டால் தமிழின் ஏற்றத்திற்கான தக்க சூழலை உருவாக்க முடியும். தமிழகத்தின் தெருக்களில், திரையரங்குகளில், தொலைக் காட்சிகளில் தமிழ் முழக்கம் கம்பீரமாய் ஒலிக்கும் என்பதை மாநாடு சுட்டிக் காட்டுகிறது. எனவே, தமிழுக்கான இத்தகைய உருப்படியான நடவடிக்கைகளை மத்திய - மாநில அரசுகளை எடுக்க வைக்க உரிமைக்குரல் எழுப்புமாறு அனைத்து ஜனநாயக சக்திகளையும், அரசியல் இயக்கங்களையும், தமிழக மக்களையும் இந்த மாநாடு அறைகூவி அழைக்கிறது.

சுனாமி பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை துரிதப்படுத்துக!

சுனாமி ஆழிப்பேரலையால், தமிழகம்-புதுவை கடற்கரை யோரங்களில் வரலாறு காணாத பேரழிவு ஏற்பட்டுள்ளது.

வரலாறு காணாத இந்த இயற்கைப் பேரழிவிலிருந்து மக்களைப் பாதுகாத்திட அனைவரும் ஒன்றுதிரண்டு செயல்படுவதுடன் மாநில அரசு தனது அரசு இயந்திரத்தை முழு வேகத்தில் முடுக்கிவிட்டு பணியாற்ற வேண்டும். மத்திய அரசு தாராள நிதியையும், தேவைப்படும் அனைத்து உதவிகளையும் அளித்து உதவிட வேண்டும். காணாமல் போன அனைவருடைய குடும்பத்தினருக்கும் நிவாரணத்தொகை வழங்க வேண்டும்.

அனைத்து மட்டங்களிலும் மக்கள் பிரதிநிதிகளையும், அனைத்துக் கட்சி பிரதிநிதிகளையும் கொண்ட கண்காணிப்புக் குழுக்களை அமைத்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டித் தருவதுடன், பொருட்கள் இழப்புகளுக்கு முழு நிவாரணம் அளிப்பதுடன், அவர்களின் தொழிலுக்குத் தேவையான படகுகள், வலைகள் மற்றும் சாதனங்களை அரசு முழுவதும் மானியமாக வழங்க வேண்டும். மீனவர்களும், கடல் சார்ந்த தொழில்கள் செய்யும் பகுதியினரும் மீண்டும் தொழில்கள் துவங்கும் வரை நிவாரண உதவிகள் வழங்க வேண்டும். குழந்தைகள் மற்றும் முதியோர் காப்பகங்களையும் கட்டித்தர வேண்டும். மீனவ மக்கள் விரும்பும் இடத்தில் வீடுகளை கட்டித் தர வேண்டும். மீனவர்கள் பெற்றுள்ள கூட்டுறவு மற்றும் வங்கி கடன்களையும் ரத்து செய்திட வேண்டும்.

சுனாமியால் பயிர்களை இழந்த விவசாயிகளுக்கு பயிருக்கான நஷ்ட ஈடு வழங்குவதுடன், அவர்கள் பெற்றுள்ள கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். சேதமடைந்த நிலங்களை மீண்டும் சாகுபடிக்கு உகந்த நிலங்களாக மாற்றிட முழு செலவினையும் அரசே ஏற்க வேண்டும். அதுவரை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், விவசாயத்

தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்.

கடல் நீர் புகுந்த உப்பளங்களை மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டுவர உதவி நிதியினை வழங்கிட வேண்டும் என மத்திய - மாநில அரசுகளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)யின் தமிழ்நாடு மாநில 18வது மாநாடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றது.

சுனாமிப் பேரிடர் ஏற்பட்டவுடன் அனைத்துப் பகுதி பொது மக்களும், தொண்டு நிறுவனங்களும், எண்ணற்ற பொதுஜன அமைப்புகளும் மனிதநேயத்தோடு இம்மக்களுக்கு பேருதவி புரிந்துள்ளன. இப்பாதிப்பு ஏற்பட்டவுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய, மாநில, மாவட்டத் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டு நிவாரணப் பணிகளிலும், மீட்புப் பணிகளிலும் கட்சியின் ஊழியர்கள் களத்தில் இறக்கிவிடப்பட்டனர். இன்று வரையிலும் இப்பணியில் கட்சி ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர். கட்சியால் திரட்டப்பட்ட நிவாரணப் பொருட்களை முறைப்படி விநியோகம் செய்யும் பணிகள் நடந்து வருகின்றன. இயற்கை சீற்றத்தால் இன்னலுக்குள்ளான மக்களுக்கு உதவிகள் நல்கிய அனைத்துப் பகுதி மக்களையும், மனிதநேய உணர்வு கொண்ட மக்களையும், நிவாரணப் பணிகளில் இன்றுவரை ஈடுபட்டுள்ள கட்சி தோழர்களையும் இம்மாநாடு நெஞ்சார பாராட்டுகிறது.

தமிழகத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்குக! கிராமப்புற வேலை உறுதி சட்டத்தை செயல்படுத்துக!

மாநில ஆட்சியாளர்கள் அமுலாக்கி வரும் புதிய பொருளாதார கொள்கை, வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு பதிலாக இருக்கிற வேலை வாய்ப்புகளையும் பறித்துள்ளது.

தமிழகத்தில் மட்டும் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப்போர் எண்ணிக்கை 1/2 கோடியை தாண்டிவிட்டது. பதிவு செய்யப்படாதோர் எண்ணிக்கை பல லட்சத்தை தாண்டும். கிராமப்புறங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அற்று போகும் நிலையுள்ளது.

மத்திய அரசும், தமிழக அரசும் தீவிரமுனைப்பு காட்டி பெருகி வரும் வேலையில்லா திண்டாட்டத்தை கட்டுப்படுத்திட, இளைஞர்களுக்கு வாழ்வளித்து சமூக அமைதியை நிலைநாட்டிட கீழ்க்கண்ட கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

- வேலை நியமன தடைச் சட்டத்தை வாபஸ் பெற்று அனைத்து துறைகளிலும் காலிப்பணியிடங்களை உடனே நிரப்ப வேண்டும்.
- வேலையில்லா காலத்துக்கு வேலையற்றோருக்கு நிவாரணம் வழங்கிட வேண்டும்.
- விவசாய மற்றும் இயற்கை வளங்களை ஆதாரமாக கொண்டு மாவட்ட அளவில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.
- சுய தொழில் துவங்க வங்கி மூலம் கடன் பெறுவதை எளிமைப்படுத்திட வேண்டும்.
- மத்திய அரசு குறைந்தபட்ச பொது திட்டத்தில் அறிவித்துள்ளதை போன்று வீட்டிற்கு ஒருவருக்கு ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை உறுதி சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

தீர்மானம் - 6

பொதுத்துறைகளை தனியார்மயமாக்குவதைக் கைவிடுக!

பொதுத்துறை நிறுவனங்களின் மூலம், லாபப் பங்கீடு, வரிகள் போன்ற பல இனங்களால் மத்திய அரசு மிகுந்த வருவாய் ஈட்டுகிறது. தலித் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு சமூகநீதி வழங்கிடும் வகையில் வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு கொள்கையும் பொதுத்துறையில் அமலாக்கப்படுகிறது.

இப்படிப்பட்ட பொதுத்துறையை சீரழிக்கும் தனியார்மய கொள்கையை பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு தனது 6 ஆண்டு பதவிக் காலத்தில் தீவிரப்படுத்தியது. பால்கோ, இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் போன்ற கேந்திரமான லாபமீட்டும் நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்பட்டன. அதன் ஆட்சிக் காலத்தில் மட்டும் ரூ. 11344 கோடிக்கு பொதுத்துறை பங்குகள் விற்கப்பட்டன. மின்சாரத் துறையை தனியார்மயமாக்க மின்சாரச் சட்டம் 2003 நிறைவேற்றப்பட்டது. பாதுகாப்பு துறையில் கூட அன்னிய முதலீடு அனுமதிக்கப்பட்டது.

தற்போதுள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசும், தனியார்மய நடவடிக்கைகளை கைவிட மறுத்து வருகிறது. விமான நிலையங்களை தனியார்வசம் ஒப்படைப்பது, தொலைதொடர்பு, காப்பீடு, சிவில் விமான போக்குவரத்து துறைகளில் 74 சதம் அன்னிய முதலீடு அனுமதிப்பது, பெல் நிறுவன பங்குகளை விற்க முயற்சிப்பது, ஊட்டி போட்டோ பிலிம் நிறுவனத்தை தொடர்ந்து இயக்க தயங்குவது, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் 10 சத பங்குகளை விற்பது, மாருதி நிறுவனத்தின் 7.5 சத பங்குகளை விற்பது போன்ற பல தனியார்மய நடவடிக்கைகளையும் தயக்கமின்றி நிறைவேற்றி வருகிறது. இத்தகைய தனியார்மயக் கொள்கைகளை கைவிடுமாறு மத்திய அரசை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

தமிழகத்தில் அஇஅதிமுக அரசு, போக்குவரத்து வழித்தடங்கள் படிப்படியாக தனியார்மயமாக்கப்படும் என சட்டமன்றத்திலேயே அறிவித்தது. மின்வினியோக பகுதிகளில் நடைபெறுகின்ற அடிப்படை வேலைகளை தனியாருக்கு வழங்குவதற்கான ஆணைகளையும் வெளியிட்டது. அரசு மற்றும் கூட்டுறவு சர்க்கரை, நூற்பாலைகளை விற்பதற்கான நடவடிக்கைகளையும் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

மாநில அரசின் கீழ் உள்ள பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயமாக்கும் நடவடிக்கைகள் அனைத்தையும் முழுமையாக கைவிட வேண்டுமென இம்மாநாடு வலியுறுத்துகிறது.

தீர்மானம் -7

விவசாயத் தொழிலாளர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுக!

தமிழகத்தில் சுமார் ஒரு கோடி விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு 70 நாட்களுக்கும் குறைவாகத்தான் வேலை கிடைக்கிறது. கிடைக்கும் சொற்ப வேலை நாட்களுக்கும் கட்டுப்படியான கூலி கிடைக்கவில்லை சமுதாயத்தின் அடித்தட்டு மக்களான ஒரு கோடி விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வு இருளில் மூழ்கியுள்ளது. கிராமப்புற அடித்தட்டு மக்களுக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்ட "தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியத்தை" அதிமுக அரசு முடக்கி வைத்திருப்பதை இம்மாநாடு வன்மையாக கண்டிப்பதுடன், நலவாரியக்குழுவில் அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம் போன்ற அமைப்புகளின் பிரதிநிதிகளை இணைத்து உடனடியாக செயல்படுத்த வேண்டுமென இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

விவசாயத் தொழிலாளர்களின் பிரச்னைகள் குறித்து கோலப்பன் குழு அளித்துள்ள 43 பரிந்துரைகளை கறாராக அமலாக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். கூலிச் சட்டத்தை திருத்தியமைக்க

வேண்டும். விவசாயத் தொழிலாளர்களுக்கு வீட்டுமனை அளிப்பதுடன் வீடுகள் கட்டிக் கொடுப்பதும், குடியிருப்பு பகுதிகளில் குடிநீர், தெருவிளக்கு, பாதை, கழிப்பிடம் உள்ளிட்ட அடிப்படை வசதி செய்து தரவும், வயதானவர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் அளிப்பது உள்ளிட்ட வசதிகள் செய்து தர வேண்டுமென இம்மாநாடு கோருகிறது.

விவசாயத் தொழிலாளர்களை பட்டினிக் கொடுமையிலிருந்து பாதுகாத்திட மத்திய அரசு ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை அளிக்கும் சட்டத்தை நிறைவேற்றுவதுடன், அதனை அனைத்து மாவட்டங்களிலும் அமலாக்கிட வேண்டுமென இம்மாநாடு வற்புறுத்துகிறது.

தீர்மானம் - 8

விவசாயிகள் கோரிக்கைகளை நிறைவேற்றுக!

அமுலாக்கப்படும் தாராள இறக்குமதி கொள்கையாலும் தொடர் வறட்சியின் காரணமாகவும் தமிழகத்தில் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் பெருந்துயரத்திற்கு ஆளாகியுள்ளனர். அரசு மற்றும் கூட்டுறவு கடன் முற்றிலும் கிடைக்கவில்லை. பயிர் இன்சூரன்ஸ் திட்டம் முழுமையாக அமல்படுத்தப்படவில்லை. தமிழ்நாட்டில் பட்டினி சாவுகள் மற்றும் விவசாயிகள் தற்கொலைகள் நடந்துள்ளன. விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. வழங்கப்படும் மானியங்களும் வெட்டப்படுகின்றன. நெருக்கடியில் உழலும் விவசாயிகளை காப்பாற்ற தமிழக அரசு துரும்பைக் கூட அசைக்கவில்லை. தமிழக அரசின் இத்தகைய விவசாய விரோத போக்கினை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது.

- விவசாய விளைபொருட்கள் தாராள இறக்குமதியை தடை செய்ய வேண்டும். இறக்குமதி பொருட்களுக்கு 100 சதவீதம் சுங்கவரி தீர்மானிக்க வேண்டும். விவசாய விளைபொருட்

களுக்கு கட்டுப்படியான விலையை தீர்மானித்து அரசே கொள்முதல் செய்திட வேண்டும்.

- தமிழகத்தில் தோட்டக்கலை பயிர் உற்பத்தி பொருட்களை பாதுகாக்க தேவையான இடங்களில் குளிர் பதன கிடங்குகளை அமைப்பதுடன், ஏற்றுமதிக்கான வாய்ப்புகளையும் உருவாக்கித் தரவேண்டும்.
- கரும்புக்கு 8.5 சர்க்கரை சத்துக்கு டன் 1க்கு ரூ. 1000/- விலை தீர்மானித்திட வேண்டும். உச்சநீதிமன்ற உத்தரவுப்படி மாநில அரசு பரிந்துரை விலையை உடன் அறிவிக்க வேண்டும். கரும்புக்கான பாக்கிகளை விவசாயிகளுக்கு உடன் அரசு பெற்றுத் தர வேண்டும்.
- தமிழ்நாட்டில் ஒப்பந்த சாகுபடி முறை அமலாக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு கம்பெனிகள் வழங்கும் கடன், வட்டி, இடுபொருட்கள் மற்றும் உற்பத்தியாகும் பொருட்களை கொள்முதல் செய்வது. விலை தீர்மானிப்பது உட்பட அனைத்திலும் அரசின் பங்களிப்பும், தலையீடும் இருக்க வேண்டும்.
- ஏழை மற்றும் நடுத்தர விவசாயிகளின் கடன், வட்டிகளையும் இயற்கை சீற்றத்தால் பாதித்த விவசாயிகளின் நிலத்துக்கான கடன், வட்டிகளையும் அரசு ரத்து செய்திட வேண்டும்.
- மாநிலம் முழுவதும் தற்போது அறுவடையாகும் முழு நெல்லையும் அரசு கொள்முதல் செய்திட வேண்டும், குவிண்டாலுக்கு ரூ. 100 ஊக்கத்தொகை வழங்குவதுடன் கொள்முதல் நிலையங்களில் நடைபெறும் முறைகேடுகளை தடுத்து நிறுத்த வேண்டும்.
- நவீன யுகத்தில் புதிய சாகுபடி முறைகள், மார்க்கெட் நிலவரம், போன்றவை குறித்து விவசாயிகளுக்கு தொடர்ந்து பயிற்சி அளிப்பதுடன் பஞ்சாயத்து அளவில் விவசாயிகள் தகவல் மையங்களை அரசு உருவாக்கிட வேண்டும்.
- பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தை மாவட்ட, வட்ட அளவில் தனியான அதிகாரிகள் நியமித்து முழுமையாக செயல்படுத்திட வேண்டும்.

தீர்மானம் - 9

பெண்கள் மீதான
கொடுமைகளுக்கு முடிவு கட்டிடுக!

உலகமயக் கொள்கைகளின் பொருளாதார தாக்கத்தோடு மோசமான சமூகத்தாக்கமும் பெண்கள் மீதான வன்முறையை பரவலாக்கி குரூரமாக்கியுள்ளது.

அடிப்படையில் பெண், சமூகத்தில் மதிப்புக்குறைந்தவளாக இருக்கிற நிலையும், போகப் பொருள் என்கிற பார்வையும், பொருளாதாரத்தில் ஓரம் கட்டப்படும் நிலையும் தற்போதைய கொள்கைகளால் தீவிரமடைந்து, வன்முறை பெருகக் காரணமாக அமைகின்றன.

- நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கும் சட்டத்தை மேலும் தாமதப்படுத்தாமல் நிறைவேற்ற வேண்டும்.
- தமிழக மகளிர் ஆணையம் சட்டரீதியான அந்தஸ்து பெற வேண்டும்.
- வரதட்சணை உள்ளிட்ட மகளிர் மீதான வன்முறைகளை தடுத்திட மகளிர் காவல் நிலையங்கள் உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பள்ளி பாடத்திட்டத்திலும், ஊடகங்களிலும் பெண்கள் குறித்த சித்தரிப்பு முறைப்படுத்தப்படப்பட வேண்டும்.

குடும்ப வன்முறை தடுப்புச்சட்டம், பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல் தடுப்புச்சட்டம் போன்றவை விரைவில் நிறை வேற்றப்பட வேண்டும்.

பாலினத் தெரிவு செய்யும் பரிசோதனை முறைகளை ஒழுங்கு படுத்தும் சட்டம் தமிழகத்தில் கறாராக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

பெண்களைக் கடத்தி கட்டாயப்படுத்தி விபச்சாரத்தில் ஈடுபடுத்தும் குற்றங்களைக் கட்டுப்படுத்த, மாவட்ட அளவிலான கண்காணிப்புக்குழுக்களை முறையாக செயல்படுத்த வேண்டும்.

எளிமையான, வரதட்சணை இல்லாத, சுய விருப்ப, சாதிமறுப்புத் திருமணங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

கணினி, மொபைல் போன்கள் வழியாக நடத்தப்படும் பாலியல் குற்றங்களைக் கட்டுப்படுத்த காவல்துறை திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து சட்டங்களிலும், திட்டங்களிலும், பெண்களுக்கான வாய்ப்புகள் உறுதி செய்யப்பட வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் - 10

உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரம் – கூடுதல் நிதி வழங்குக!

தமிழகத்தில் 2001 தேர்தலில் வெற்றி பெற்று பொறுப்பேற்ற உள்ளாட்சி மன்றங்கள் கடந்த 40 மாதங்களாக மக்களுடைய அடிப்படை பிரச்சனைகளை தீர்க்க முடியாமல் திணறுகின்றன. குடிநீர், மின்விளக்கு, சாலை, கல்வி, சுகாதாரம், வறுமை ஒழிப்பு, விவசாயம் போன்று 29 அதிகாரங்களை மாநில அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்க வேண்டுமென்று மத்திய பஞ்சாயத்து சட்டம் கூறுகிறது. ஆனால் மாநில அதிமுக அரசு உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகாரமும் வழங்கிடவில்லை, போதுமான நிதியும் ஒதுக்கீடு செய்யவில்லை. அதோடு சமுதாயத்தின் பின்தங்கிய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் உள்ளாட்சி துப்புரவு மற்றும் குடிநீர் வினியோகம் ஆகிய பணிகளை தனியாருக்கு தாரைவார்ப்பதையும் இம்மாநாடு கண்டிக்கிறது.

மாநில அரசு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில அரசின் வரிவருவாயின் மூன்றில் ஒரு பகுதியை நிதியாக ஒதுக்கீடு செய்ய வேண்டும். பஞ்சாயத்து சட்டம் குறிப்பிடும் 29 அதிகாரங்களையும் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அளித்திட வேண்டும்.

ஊராட்சி ஒன்றிய சாலைகளை அந்தந்த ஒன்றியங்கள் மூலமாகவே அமைத்திடும் உரிமையை பறிக்கக் கூடாது.

தமிழகத்தில் நிகழும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி அரசியலை உள்ளாட்சி அமைப்புகளில் புகுத்தி பல மாநகராட்சி, நகராட்சி மன்ற கூட்டங்கள் லாவணி பாடும் மன்றங்களாக மாறி வருவது தடுக்கப் பட்டு, மக்கள் பிரச்சனைகளை விவாதிக்க கூடிய ஆரோக்கியமான முறையில் மன்றங்களை நடத்திட வேண்டும்.

மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அங்கீகாரம் அளிக்கப்படாத மனைப்பிரிவுகளில் வீடுகட்டியோருக்கு அபிவிருத்திக் கட்டணங்களை வசூலித்த பிறகும் உரிய அடிப்படை வசதிகளை செய்து தர அரசு மறுத்து வருவது நியாயமற்றது. மூன்றாவது ஆட்சி முறை என்ற அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மேற்குவங்கம், கேரளா மாநிலங்களைப் போல் அதிக நிதி - கூடுதல் அதிகாரங்களை வழங்கி தமிழகத்தில் செயல்படுத்திட வேண்டும்.

தீர்மானம் - 11

சுகாதாரம் – அடிப்படை வசதிகளை நிறைவேற்றுக!

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக, மத்திய, மாநில அரசுகள் அமலாக்கி வரும், உலகமய, தனியார்மய, தாராளமயக் கொள்கை களால், ஏற்கனவே கடுமையாக இருந்து வந்த சாதாரண மக்களின் வாழ்நிலை மேலும் மோசமாகியுள்ளது. குறிப்பாக, அரசின் சேமநலத் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளும், கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுக் கான ஒதுக்கீடுகளும் தொடர்ந்து வெட்டப்பட்டு வருகின்றன.

தமிழகத்திலும் சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கணிசமான பகுதி மக்களுக்கு எட்டாக் கனியாகவே உள்ளது.

அதேசமயம் தனியார் மருத்துவமனைகள் புற்றீசல் போல் தோன்றி வருகின்றன. இம்மருத்துவமனைகள் பணம் பறிக்கும் முகாம்களாக

செயல்படுகின்றன. ஒட்டு மொத்தத்தில் ஏழை அடித்தட்டு மக்களுக்கு மருத்துவ சிகிச்சை மறுக்கப்படும் நிலை தான் உள்ளது என்பதை இம்மாநாடு சுட்டிக்காட்டுகிறது.

இந்த சூழலில், இம்மாநாடு கீழ்க்கண்ட

கோரிக்கைகளை முன்வைக்கிறது

- குறைந்தபட்ச பொதுத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகளுக்கான ஒதுக்கீடு, பட்ஜெட்டில் அதிகரிக்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இரண்டு மருத்துவர்கள் கண்டிப்பாக இருக்க வேண்டும். இம்மருத்துவ மனைகளில் கண்டிப்பாக பெண் மருத்துவர்கள் இருக்க வேண்டும்.
- அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் பல நிலை அரசு மருத்துவமனைகளிலும் போதிய நர்சுகள், மருத்துவ ஊழியர்கள், போதிய கட்டமைப்பு மற்றும் மருத்துவ கருவிகள் உரிய அளவுக்கு நவீன மருத்துவம் சார்ந்த மருந்துகளும், சித்தா மற்றும் ஆயுர்வேத மருந்துகளும் இருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- அனைத்து கிராமங்கள், நகரங்களிலும் நவீன கழிப்பிட வசதிகளை செய்து தருவது, கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது, பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவு படுத்துவது, சுற்றுச்சூழல் சுகாதார கேடுகளை உருவாக்கும் சாக்கடை நீர் மற்றும் குப்பைகளை அப்புறப்படுத்திட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- நாய்க்கடி, பாம்புக்கடி, மகப்பேறு போன்றவற்றிற்கான மருந்து கண்டிப்பாக அனைத்து மருத்துவமனைகளிலும் கையிருப்பில் இருக்க வேண்டும்.
- அனைத்து நகரங்களிலும், கிராமங்களிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குடிநீர் விநியோகத்தில் தனியார்மயம் கூடாது.
- சத்துணவுக் குறைவைப் போக்கும் வகையில், அனைத்து சிறுவர்களுக்கும், கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்கும் சத்துணவு அளிக்கும் விரிவான திட்டம், அந்தந்த பகுதி மக்கள் குழுக்களின் மேற்பார்வையில் சரியாக அமுல்படுத்த வேண்டும்.

- அரசு மருத்துவமனைகளில், சிகிச்சைகளுக்கு கட்டணம் வசூலிப்பதை நிறுத்த வேண்டும்.
- மாவட்ட அளவில் உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களின் செயல்பாடுகள் அந்தந்த நிலையிலான தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் உதவி / வழிகாட்டுதல்களுடன் தகுந்த மேற்பார்வையுடனும் மேம்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் போது, சுகாதாரத்துறை ஊழியர்களின் நியாயமான உரிமைகளும், பணி நிலைமைகளும், பாதுகாக்கப்பட வேண்டும்.

தீர்மானம் - 12

தீண்டாமைக் கொடுமைகளை ஒழித்திடுக!

தலித் – பழங்குடியினரின் பொருளாதார, சமூக உயர்வுக்கான நடவடிக்கை எடுத்திடுக!

தமிழகத்தின் ஆயிரக்கணக்கான கிராமங்களில் இந்த விஞ்ஞான யுகத்திலும் தீண்டாமைக் கொடுமைகள் தலைவிரித்தாடுவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கவலையுடன் சுட்டிக் காட்டுகிறது.

பலமுறை அறிவிக்கப்பட்ட பின்னரும் தலித்துகளுக்கு இட ஒதுக்கீட்டின் மூலம் வழங்கப்பட்ட பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்கச்சியேந்தல் ஊராட்சிகளில் இன்று வரை தேர்தல் முறையாக நடத்தாமல் அலட்சியப்படுத்துவதை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது.

தலித் பெண்கள், இதர பெண்கள் அனுபவிக்கும் வர்க்க பொருளாதார சுரண்டல் மற்றும் ஆணாதிக்க கொடுமைகளோடு சாதிய ஒடுக்குமுறைக்கும் உள்ளாவதால் மிகப் பெரும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பெண் பிரதிநிதிகள் செயல்பட முடியாமல் தடுக்கப்படுகின்றனர்.

இதுபோலவே பழங்குடி மக்களும் கடுமையான பொருளாதார சமூக ஒடுக்குமுறைக்கு உள்ளாகிறார்கள். ஆகவே மத்திய அரசும், தமிழக அரசும் அரசியல் உறுதியுடன் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

1. தலித் பெண்கள் உட்பட தலித் மற்றும் பழங்குடியினர் மீதான சாதி ஒடுக்குமுறை, தீண்டாமைக் கொடுமைகளை ஒழித்திட வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை நேர்மையாகவும், உறுதியாகவும் அமல்படுத்த வேண்டும். இக்குற்றங்களை விசாரிக்க சட்டப்படியான சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்து, வழக்குகளை முறையாக விசாரித்து விரைந்து தீர்ப்பு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. அரசு வேலைகளில் தலித் - பழங்குடியினர் இட ஒதுக்கீட்டை முழுமையாக அமல்படுத்திட வேண்டும். இட ஒதுக்கீட்டை 2001ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் தலித்துகளுக்கு 19 சதமாகவும், பழங்குடியினருக்கு 1.03 சதமாகவும் உயர்த்திட வேண்டும். தலித் கிறிஸ்தவர்களுக்கும் இச்சலுகைகள் வழங்கிட வேண்டும்.

3. தலித் - பழங்குடியினருக்கான சிறப்பு உட்கூறு திட்டத்தின் கீழ் இம்மக்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப உரிய நிதியினை ஒதுக்குவதோடு, இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதியினை மாநில அரசுகள் முழுமையாக செலவு செய்ய வேண்டும். தலித் மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா மற்றும் அவர்களின் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்திட வேண்டும்.

4. வன நிலங்களிலிருந்து பழங்குடி மக்களை வெளியேற்று வதற்கான முயற்சிகளை கைவிட வேண்டும். பழங்குடி மக்களுக்கு சாதிச் சான்றிதழ்களை விண்ணப்பித்த 15 நாட்களுக்குள் வழங்கிட வேண்டும்.

5. தலித்துகளுக்கு ஒதுக்கப்பட்ட பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார் மங்கலம், கொட்டக்கச்சியேந்தல் ஊராட்சிகளுக்கு தேர்தல் நடத்தவிடாமல் தடுத்திடும் ஆதிக்க சாதியினர் மீது கடும் நடவடிக்கைகள் எடுத்து அரசியல் உறுதியுடன் இந்த ஊராட்சிகளுக்கு தேர்தல் நடத்தி ஜனநாயக உரிமைகளை உறுதி செய்திட வேண்டும்.

6. தமிழ்நாட்டில் நிலச் சீர்திருத்தச் சட்டங்களில் உள்ள குறைபாடுகளை அகற்றி முழுமையாக அமல்படுத்துவதன் மூலம் உபரி நிலங்களையும், அரசின் தரிசு நிலங்களையும், நிலமில்லாத ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கிட வேண்டும். பஞ்சமி நிலங்களை மீட்டு தலித்துகளுக்கு வழங்கிட வேண்டும்.

இத்தகைய தீண்டாமை ஒழிப்பு மற்றும் தலித் - பழங்குடியினர் முன்னேற்ற நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் எடுத்திட வற்புறுத்திடவும், மக்களிடையே தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரம் சக்தியான முறையில் மேற்கொள்ளவும் இணைந்து செயல்பட முன்வருமாறு அனைத்து ஜனநாயக சக்திகளையும், அரசியல் இயக்கங்களையும், மனித உரிமை அமைப்புகளையும் மாநாடு அறைகூவி அழைக்கிறது.

தீர்மானம் - 13

காவிரி மற்றும் நதிநீர் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்க!

தமிழகத்தின் உயிர் நாடியான காவிரி நதிநீர் பிரச்சனை கடந்த முப்பதுக்கும் அதிகமான ஆண்டுகளாக தீர்க்கப்படாமல் நீடித்து வருகிறது. கர்நாடக அரசு, நடுவர்மன்ற இடைக்கால தீர்ப்பு, உச்சநீதிமன்ற தீர்ப்பு, காவிரி நதிநீர் ஆணையத்தின் முடிவுகளை உதாசீனம் செய்து வருகிறது. இதன் விளைவாக முப்போக சாகுபடி கொண்ட டெல்டா மாவட்டங்களில் ஒரு போக சாகுபடிக்கே வழியற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இப்பிரச்சனையில் நமது பங்கினை பெற தமிழக அரசும் ஆக்கப்பூர்வமான தொடர் முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

நான்கு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட இப்பிரச்சனையில் தீர்வு காண மத்திய அரசு காலம் கடத்தி வருவதால் சம்பந்தப்பட்ட அண்டை மாநிலங்களில் அவ்வப்போது பதட்டநிலை ஏற்படுவதையும்

இம்மாநாடு கவலையோடு சுட்டிக் காட்டுகிறது.

1. ஆயிரம் ஆண்டு தமிழகத்து பாசன உரிமையை பாதுகாத்திட காவிரி நீர்பிரச்சனைக்கு விரைவில் தீர்வு காண வேண்டும்.

2. மத்திய அரசு காவிரி நடுவர்மன்ற இடைக்கால தீர்ப்பினை உறுதியாக அமலாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக அரசு இதனை நிறைவேற்ற ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

3. காவிரி நடுவர் மன்றம் அதன் இறுதி தீர்ப்பினை உடனடியாக வெளியிட வேண்டும். அத்தீர்ப்பினை அமலாக்கிட மத்திய அரசும், தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், புதுவை ஆகிய மாநில அரசுகளும் அரசியல் உறுதியுடன் செயல்பட வேண்டுமென இம்மாநாடு வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறது.

தென்மாவட்டங்களுக்கு முக்கிய பாசன ஆதாரமாக உள்ள முல்லைப் பெரியார் அணையின் தண்ணீர் மட்டத்தை தீர்மானிப்பது பரம்பிக்குளம், ஆழியார் று உடன்படிக்கை மற்றும் தமிழக - கேரள எல்லையில் உள்ள அணைக்கட்டுக்கள் மற்றும் தண்ணீர் பங்கிடு போன்ற பல பிரச்சனைகள் தீர்வுகாணப்படாமல் நீடித்து வருகிறது.

தமிழ்நாடு, கேரளா மாநிலங்கள் சம்பந்தப்பட்ட அனைத்து நதிநீர் பிரச்சனைகளையும் காலம் கடத்தாமல் மத்திய அரசு தலையிட்டு தமிழக, கேரள அரசுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமுகமான தீர்வு காண வேண்டுமென இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது. மழைநீர் சேமிப்பு திட்டத்திற்கு தமிழ்க அரசு கூடுதல் நிதி ஒதுக்கி செயல்படுத்துவது, தமிழகத்தில் உள்ள 39,000 ஏரிகளை தனி வாரியம் உருவாக்கி தூர்வாரி பராமரிப்பது, மழைநீர் கடலில் கலந்து வீணாவதை தடுத்திட வாய்ப்புள்ள அனைத்து இடங்களிலும் அணைக்கட்டுகளையும், தடுப்பணைகளையும் உருவாக்குவது போன்ற நீர் சேகரிப்பு திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென இம்மாநாடு வற்புறுத்துகிறது.

தீர்மானம் - 14

கூட்டுறவு அமைப்புகளை பாதுகாத்திடுக!

தமிழகத்தில் கூட்டுறவு அமைப்புகளுக்கு கடந்த நான்காண்டுகளாக தேர்தல் நடத்தாதது ஜனநாயக படுகொலையாகும். இப்போக்கு கூட்டுறவு அமைப்புகளை மொத்தமாக நாசப்படுத்தியுள்ளது. 4000க்கும் அதிகமான கிராம கூட்டுறவு வங்கிகளும் 6 மாவட்ட வங்கிகளும் மூடப்படும் ஆபத்தான நிலை உள்ளது. மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் பயன்பட வேண்டிய கூட்டுறவு அமைப்புகள் ஆட்சியாளர்கள் மற்றும் அதிகாரிகளின் கொள்ளைக்காடாக மாறியுள்ளது. இதற்கான முழு பொறுப்பும், ஆளும் அதிமுக அரசையே சாரும் என இம்மாநாடு சுட்டிக்காட்டுகிறது.

கைத்தறி, பட்டு மற்றும் பால் உற்பத்தியாளர்கள் போன்ற தொழில் கூட்டுறவு அமைப்புகளும், கூட்டுறவு சர்க்கரை மற்றும் நூற்பாலைகளும் அதிகாரிகளின் ஊழல் மற்றும் ஊதாரித் தனங்களால் திவாலாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

1. கூட்டுறவு அமைப்புகளை ஜனநாயகப்படுத்திட தனித் தேர்வாணையம் மூலம் உண்மையான உறுப்பினர்கள் பங்கேற்கும் வகையில் உறுப்பினர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கி தேர்தல் நடத்தப்பட வேண்டும்.
2. நலிவுற்ற கூட்டுறவு அமைப்புகளை பாதுகாக்க தமிழக அரசு தனது சொந்த பொறுப்பில் மறு சீரமைப்பு நிதியினை ஒதுக்கிட வேண்டும்.
3. கூட்டுறவு அமைப்புகளுக்கு மறுமுதலீட்டு நிதியாக வழங்க மத்திய அரசிடம் உள்ள நிதியில் தமிழகத்திற்கு உரிய பங்கான ரூ. 1000 கோடியினை மத்திய அரசிடமிருந்து பெற்று நலிவுற்ற கூட்டுறவு அமைப்புகளை புனரமைத்திட வேண்டும்.
4. கூட்டுறவு அமைப்புகளின் ஜனநாயக செயல்பாட்டை உறுதி செய்திட "மாதிரி கூட்டுறவு சட்டத்தை" அமல்படுத்திட தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழக அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)-யின் 18வது தமிழ்நாடு மாநில மாநாடு வலியுறுத்துகிறது.

சென்னையில் உச்சநீதிமன்ற கிளையை நிறுவுக! தமிழகத்தில் காலியாக இருக்கும் நீதிபதி பணி இடங்களை உடனடியாக நிரப்புக!

உச்சநீதிமன்றத்தின் கிளை சென்னையில் செயல்பட தேவையான சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)-யின் 18வது தமிழ்நாடு மாநில மாநாடு மத்திய அரசை கோருகிறது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் இருக்க வேண்டிய மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கை 42 ஆகும். ஆனால் தற்பொழுது 26 நீதிபதிகள் மட்டுமே உள்ளனர். அதேபோல சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளைக்கு 14 நீதிபதிகளுக்கு பதிலாக 4 நீதிபதிகள் மட்டுமே உள்ளனர். உயர்நீதிமன்றத்தைக் காட்டிலும், மாவட்ட மற்றும் பலமட்ட நீதிமன்றங்களின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. மூன்றில் ஒரு பங்கு நீதிபதி பணியிடங்கள் காலியாக உள்ளது. இதனால் சென்னை உயர்நீதிமன்றத்திலும், மாவட்ட மற்றும் பலமட்ட நீதிமன்றங்களிலும் ஏராளமான வழக்குகள் விசாரிக்கப் படாமல், நீண்ட காலமாக தேங்கியுள்ளன.

எனவே, காலியாக உள்ள நீதிபதி பணியிடங்களை அரசியல் குறுக்கீடு இன்றி உடனே நிரப்ப வேண்டும். உயர்நீதிமன்ற நீதிபதிகளின் மொத்த எண்ணிக்கையை ஜஸ்வந்த் சிங் கமிஷன் பரிந்துரைப்படி 55 ஆக உயர்த்த வேண்டும். அதில் 20 நீதிபதிகளை மதுரை உயர்நீதிமன்றக் கிளைக்கு அமர்த்த வேண்டும்.

போதுமான நீதிமன்றப் பணியாளர்கள் இல்லை. குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் கூட இல்லாத நீதிமன்றங்கள் நிறைய உள்ளன. நீதிமன்றங்களுக்கு உரிய அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும். தேவையான அளவு பணியாளர்களை நியமிக்க வேண்டும்.

ஒரு சில மாவட்டங்களைத் தவிர, தமிழகத்தின் பிற மாவட்டங் களில் குடும்ப நல நீதிமன்றங்கள் அமைக்கப்படவில்லை. பாதிப்பிற

குள்ளாகும் பெண்கள் உரிய பரிகாரம் பெறவும், அவர்தம் சட்டபூர்வ உரிமைகளை பாதுகாக்கவும் மாவட்ட வாரியாக குடும்ப நல நீதிமன்றங்களை அமைத்திட வேண்டும். இதர துறைகளைப் போலவே நீதிமன்றத்துறையில் தலையெடுத்துள்ள ஊழல் மற்றும் இதர குற்றச்சாட்டுக்கள் மீது விசாரிக்கப்பட்டு களையப்பட வேண்டும். ஏழைகள் மற்றும் நடுத்தர மக்கள் நீதிமன்றங்களை அணுக முடியாதவாறு உயர்த்தப்பட்டுள்ள நீதிமன்ற கட்டணங்களை குறைத்திட வேண்டுமெனவும் இம்மாநாடு கோருகிறது.

தீர்மானம் - 16

பொதுமக்களின் சேமிப்பிற்கான வட்டி விகிதத்தை உயர்த்துக!

சேமிப்புத் திட்டங்களுக்கு நியாயமான வட்டி விகிதம் வழங்கி வந்த வங்கிகளும், அரசின் கட்டுப்பாட்டிலுள்ள இதர நிறுவனங்களும் சேமிப்பிற்கான வட்டி விகிதத்தை 12 சதத்திலிருந்து 6 சதமாக குறைத்து விட்டன. மேலும் குறைத்திட திட்டமிட்டுள்ளன.

இந்த வருமானத்தை நம்பியிருந்த ஏழை, நடுத்தர மக்கள் தங்களது சேமிப்பிற்கு உரிய வட்டித்தொகை கிடைக்காததால் தனி நபர்களிடமும், தனியார் நிதி நிறுவனங்களிடமும் தங்களது சேமிப்பை போட்டு மோசடி வலையில் சிக்கியுள்ளனர்.

இவ்வாறு கிடைக்கும் ஏழை நடுத்தர மக்களின் சேமிப்பை. தனி நபர்களும், தனியார் நிதி நிறுவனங்களும் கபளீகரம் செய்துள்ளது உலகறிந்தது. இம்மக்களுக்கு விரைவில் உரிய பரிகாரம் வழங்கிட வேண்டும்.

ஏழை, எளிய, நடுத்தர மக்களின் சேமிப்பிற்கு உத்தரவாதமும், நியாயமான வட்டித் தொகையும் ஏற்கனவே வழங்கி வந்தது போல் 12 சதவீதம் உயர்த்தி வழங்க வேண்டும்.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துக!

தமிழகத்தின் தொழில் வளர்ச்சியை வேகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மூலமாகவே, தமிழக மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த முடியும் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில 18வது மாநாடு சுட்டிக்காட்ட விரும்புகிறது.

மத்திய அரசு அறிவித்துள்ள சென்னை கடல்நீரை குடிநீராக்கும் திட்டம், நாங்குனேரி உயர் தொழில் நுட்ப பூங்கா திட்டம் போன்றவற்றை தமிழக அரசு கிடப்பில் போடுவதை கண்டிப்பதுடன் - இத்திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்துகிறது.

தமிழகத்தின் நீண்டகால கோரிக்கையான சேதுசமுத்திர கால்வாய்த் திட்டத்தை மத்திய அரசு ஏற்று அதற்கு நிதி ஒதுக்கி இருப்பதை இம்மாநாடு பாராட்டி வரவேற்கிறது. இதனை நிறைவேற்ற தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அதே சமயம் இத்திட்டம் அமுலாக்கப்பட்டால் மீனவர்கள் மற்றும் கடலோர மாவட்ட மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற அச்சத்தை போக்கும் வகையில் மீனவர்கள் மற்றும் இதரப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் ஏற்பாடுகளை திட்டத்தின் பகுதியாக ஏற்று நிறைவேற்ற வேண்டும்.

- கைத்தறி, விசைத்தறி மற்றும் நூற்பு நெசவாளிகள், பின்னலாடைகள், ஆயத்த ஆடைகள் என ஜவுளித்தொழில் பிரிவு அனைத்திலும் முன்னேற்றம் காண திட்டமிட வேண்டும்.
- தமிழகத்தில் விவசாயம் சார்ந்த தொழில் துறையாக உணவு பொருட்கள், மிளகாய் வத்தல், காய்கறி, கனிகள், மலர்கள் பதப்படுத்தப்படும், பாதுகாக்கும் தொழிற்சாலைகளை கிராமப் புறங்களில் உருவாக்க வேண்டும். அழிந்து வரும் கிராம கைத்தொழில்களை பாதுகாத்திட நிதியுதவியையும் அப் பொருட்களுக்கான மார்க்கெட் ஏற்பாட்டினையும் செய்ய வேண்டும்.

- தமிழகத்தில் ஏராளமாக உள்ள பாக்சைட், கிராபைட், கிரானைட் உட்பட கனிம வளங்களை உற்பத்தி செய்ய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். உப்பளங்கள், உப்பு தொழிற்சாலை விஸ்தரிக்கப்பட வேண்டும்.
- தமிழகத்தில் பல இடங்களில் உள்ள எரிவாயுவை முழுமையாக பயன்படுத்திட தொழிற்சாலைகளை உருவாக்கிட வேண்டும்.
- கடல் வளத்தை முழுமையாக பயன்படுத்திட மீன்பிடி, மீன் உற்பத்தி, பதப்படுத்தல், பாதுகாத்தல் தொடர்பான தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும்.
- தமிழகத்தில் தொழில் உற்பத்தியில் கணிசமான பங்களிப்பை சிறு தொழில்கள் அளிக்கின்றன. சிறுதொழில்கள், தொழிற் பேட்டை தொழில்களை பாதுகாக்க, மூலப் பொருட்களையும், வங்கி கடன்களையும் முறையாக வழங்கி ஊக்குவிக்க வேண்டும். மத்திய - மாநில அரசின் கொள்கை களால் அவைகள் பாதிக்கப் படாமல் இருக்கவும், சிறு தொழில்களுக்கான விதிவிலக்கும் உற்பத்தி பொருட்கள் ஒதுக்கீடும், மூலப்பொருட்களை முறையாக் வழங்கியும் சிறு தொழில்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். சிறு தொழில்களில் அன்னிய, பன்னாட்டு நிறுவனங்கள் நுழைவதை தடுத்து நிறுத்திட வேண்டும்.
- தமிழகத்தில் உள்ள மத்திய பொர்துத்துறை, மாநில அரசுத்துறை, கூட்டுறவு துறை மூலம் செயல்பட்டு வரும் தொழிற்சாலைகளை பாதுகாப்பதும், விஸ்தரிப்பதற்கான வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்துவது அவசியம்.
- தமிழகத்தில் வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்கள் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்து, அறிவிக்கப் பட்டுள்ள. நாங்குனேரி ஹைடெக் பூங்கா உட்பட தொழில் நுட்ப பூங்காக்களை அமைக்க வேண்டும்.

தொழில்வளர்ச்சிக்கு தேவையான அடிப்படையான கட்டுமான வசதிகளை மேம்படுத்த வேண்டும்.

சாலை வசதிகள் - அகலபாதை ரயில்

தற்போதுள்ள பிரதான சாலைகளை அகன்ற நான்கு வழி மற்றும் ஆறு வழி தேசிய நெடுஞ்சாலைகளாக விரைவாக மாற்ற வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பிரதான ரயில் பாதைகளையும் அகல ரயில் பாதைகளாக துரிதமாக மாற்றிட வேண்டும்.

புதிய துறைமுகங்கள்

புதிய துறைமுகங்களை உருவாக்குவதுடன், குளச்சல், நாகை, கடலூர், தொண்டி ஆகிய துறைமுகங்களை விஸ்தரிப்பது, சென்னை முதல் குமரி வரை நீர்வழி போக்குவரத்து ஏற்படுத்துவது. கடலோர பகுதிகளில் மீன்பிடித் துறைமுகங்களை உருவாக்கிட வேண்டும்.

விமான நிலையம்

சென்னை விமான நிலையத்தை விரிவுபடுத்துவதுடன் திருச்சி, மதுரை,கோவை விமான நிலையங்களை சர்வதேச தரத்திற்கு ஏற்ற விமான நிலையங்களாக மாற்ற வேண்டும்.

இவ்வாறு தொழில் வளர்ச்சிக்கு பன்முகத் தன்மையுடன் திட்டமிட்டு செயலாற்றுவதின் மூலமே தமிழகத்தில் தொழில் துறையில் வளர்ச்சி ஏற்படும். பொருளாதாரம் மேம்படும். வேலையின்மையை அகற்றிட உதவும். இத்திசை வழியில் தமிழக அரசு செயல்பட வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)-யின் தமிழ் மாநிலக்குழுவின் 18வது மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் - 18

தீப்பெட்டி தொழிலைப் பாதுகாத்திடுக!

தமிழகத்தில் தூத்துக்குடி, விருதுநகர், வேலூர், நெல்லை ஆகிய மாவட்டங்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு குடிசை தீப்பெட்டித் தொழில் வேலை வாய்ப்பை கொடுத்து வருகிறது. இப்போது பன்னாட்டு நிறுவனமான இந்திய டுபாக்கோ கம்பெனி (ITC) தீப்பெட்டி தொழிலில் இறங்கியுள்ளது. இதன் மூலம் சில வருடங்களிலேயே இத் தொழில் அந்நிய கம்பெனிகளின் கட்டுப்பாட்டிற்குள் செல்லும் அபாயம் ஏற்பட்டு இம்மாவட்டங்களின் சமூக பொருளாதார நிலை கடும் பாதிப்புகளை சந்திக்க நேரிடும்.

இதனைத் தவிர்த்திட மத்திய, மாநில அரசுகள் துரிதமாக

தலையிட்டு ஐடிசி, நிறுவனம் தீப்பெட்டி உற்பத்தியிலும், விநியோகத்திலும் ஈடுபடுவதை தடை விதித்து, குடிசைத் தீப்பெட்டி, தொழிலையும், லட்சக்கணக்கான தொழிலாளர்களையும் பாதுகாத்திட வேண்டும்.

தீர்மானம் - 19

தமிழக அரசின் ஜனநாயக - தொழிலாளர் விரோத கொள்கைகளுக்குக் கண்டனம்!

அஇஅதிமுக அரசு ஆட்சிக்கு வந்த வேகத்திலேயே மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் முயற்சியில் ஈடுபட்டது. ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதை தடுப்பது, சுதந்திரப் போராட்டக் காலத்திலிருந்தே பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்ட மெரீனா கடற்கரையில் பொது நிகழ்ச்சிகளுக்கு தடை என மக்களின் கண்டன நடவடிக்கைகளுக்கெல்லாம் முட்டுக்கட்டை போடும் போக்கை அரசு பின்பற்றுகிறது. 'பொடா' போன்ற கறுப்பு சட்டங்களை பயன்படுத்துவது, 'எஸ்மா', 'டெஸ்மா', போன்ற கறுப்புச் சட்டங்களைப் பயன்படுத்தி தொழிலாளர்கள், ஊழியர்களின் அடிப்படை வேலைநிறுத்த உரிமைகளைப் பறிப்பது, பழிவாங்கும் முறையில் அரசியல் தலைவர்களுக்கு எதிராகவும் பத்திரிகைகள் மீதும் வழக்கு போடுவது போன்ற இந்த அரசின் செயல்கள் குறித்து பட்டியலிட்டால் அது நீளும்.

தமிழ்நாடு சட்டமன்றத்தின் செயல்பாடுகளை முடமாக்குவது இந்த அரசின் அணுகுமுறையின் தொடர்ச்சியாகும்.

தொழிலாளர்கள் மற்றும் உழைப்பாளி மக்களின் நலன் காப்பதற்கான சட்டங்களை அமலாக்குவதற்கான அரசு அமைப்புகள் முடக்கப்பட்டுள்ளன. போராடிப் பெற்ற உரிமைகள் பறிக்கப் படுகின்றன. தொழிலாளர் நலத்துறையானது செயலற்று நிற்கும் அவலநிலை தொடருகிறது.

முன்னுதாரணமான முறையில் செயல்பட வேண்டிய அரசு நிறுவனங்கள், தொழிலாளர் நல சட்டங்களையும், தொழிற்சங்க

களுடனான ஒப்பந்தங்களையும், நீதிமன்ற தீர்ப்புகளையும் அமலாக்க மறுப்பதும் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தைகளை நடத்தி புதிய உடன்பாடுகளை உருவாக்க மறுப்பதும் அரசின் தொழிலாளர் விரோதப் போக்கிற்கு எடுத்துக்காட்டுகளாகும். அதிமுக அரசின் இத் தகைய தொழிலாளர் விரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகளை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது.

ஜனநாயக உரிமைகளையும், தொழிலாளர் உரிமைகளையும் நிராகரிக்கும் அரசின் கொள்கைகளுக்கு எதிராக, ஒன்றுபட்ட வலுவான போராட்டங்களுக்குத் தயாராகுமாறு இம்மாநாடு உழைப்பாளி மக்களை அறைகூவி அழைக்கிறது.

தீர்மானம் - 20

சாலைப் பணியாளர்களுக்கு மீண்டும் பணி வழங்குக!

ஐந்தாண்டுகள் பணியாற்றிய சாலைப் பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டிருப்பது உழைப்பாளி மக்களின் பணிப் பாதுகாப்பிற்கு விடுக்கப்பட்டுள்ள சவாலாகும். பணிநீக்கம் செய்யப்பட்ட சாலைப் பணியாளர்களைப் பணித் தொடர்ச்சியுடன் மீளப் பணியமர்த்தவும், அவர்களுக்கு ஆறுமாத ஊதியத்தை வழங்கவும், சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. நியாயமான இத் தீர்ப்பை அமுலாக்க மறுத்து விட்டு தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்காடச் சென்றதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

எனவே, இந்த வழக்கை திரும்பப் பெற்று சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பின் அடிப்படையில், பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள அனைத்து சாலைப் பணியாளர்களையும் உடன் பணியில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென இம்மாநாடு தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் - 21

அதிரடிப்படை அத்துமீறலால் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்ட ஈடு வழங்குக!

தமிழகத்தில் வனக் குற்றவாளியான வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகளை பிடிப்பதற்காக அமைக்கப்பட்ட அதிரடிப் படையினரின் அட்டூழியங்கள், சட்ட விரோத செயல்கள் குறித்து விசாரிப்பதற்காக மனித உரிமை கமிஷனால் அமைக்கப்பட்ட நீதிபதி சதாசிவன் அவர்கள் தலைமையிலான விசாரணைக் கமிஷன் அறிக்கையை வெளியிட வேண்டுமெனவும், வீரப்பன், அவனது கூட்டாளிகள், மற்றும் அதிரடிப் படையினரால் கொலை, தாக்குதல், சித்ரவதை உள்ளிட்ட பல்வேறு வன்முறைகளுக்கு ஆளாகி பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் அரசு நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்றும் இம்மாநாடு அதிமுக அரசை வற்புறுத்துகிறது.

தீர்மானம் - 22

"டெஸ்மா" சட்டத்தை திரும்பப் பெறுக! வேலைநிறுத்த உரிமையை அடிப்படை உரிமையாக்குக!

தமிழ்நாடு அரசு பல்வேறு துறைகளில் வேலை நிறுத்தத்தை தடைசெய்யும் நோக்கோடு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டத்தை சட்டப் பேரவை கூட்டத்தில் அராஜகமாக நிறைவேற்றியது. இத்துறைகளில் வேலைநிறுத்தம் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதுடன், அங்கு வேலைநிறுத்தம் நடைபெற்றால்,

அதில் பங்கேற்றவர்கள், தலைமை தாங்கியவர்கள் மட்டுமின்றி, அவர்களுக்கு ஆதரவளிப்போர், நிதியுதவி செய்வோர் உட்பட அனைவருக்கும் மூன்றாண்டு சிறை தண்டனை, ரூ. 5000/- அபராதம் உள்ளிட்ட தண்டனைகள் வழங்க இச்சட்டம் வழிவகுக்கிறது.

இந்த சட்ட விதிகளின் கீழ்தான் 2003 வேலைநிறுத்தப் போராட்டத்தின் போது லட்சக்கணக்கான ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் பணிநீக்கம் செய்யப்பட்டனர். இதே சட்டத்தை பயன் படுத்தித்தான் அரசியல் கட்சி தலைவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப் பட்டது. இத்தகைய எதேச்சதிகார டெஸ்மா சட்டத்தை தமிழ்நாடு அரசு தொடர்ந்து கால நீட்டிப்புக் கொடுத்து அமல்படுத்தி வருவதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், இச்சட்டத்தை திரும்பப் பெற வேண்டுமென தமிழ்நாடு அரசை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

அதே நேரத்தில், இத்தகைய தொழிலாளர் விரோத சட்டங்கள் நிறை வேற்ற முடியாத அளவிற்கு, சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் (ஐ.எல்.ஓ) கோட்பாடுகளின் அடிப்படையில், வேலைநிறுத்த உரிமையை அரசியல் சட்டத்தின் படியான சட்ட உரிமையாக்கு வதற்கும், அடிப்படை உரிமையாக்குவதற்கான சட்டங்களை நாடாளு மன்றத்தில் நிறைவேற்ற வேண்டுமென மத்திய அரசை இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் - 23

விவசாயத் தொழிலாளர்களுக்கும், ஏழை விவசாயிகளுக்கும் நில வினியோகம் செய்திடுக!

தமிழ்நாட்டின் நீடித்த வறுமைக்கும், வேலையின்மைக்கும் அடிப்படை காரணம் கிராமப்புறங்களில் முறையான நிலவினியோகம் நிறை வேற்றப்படாததேயாகும். இதற்கென நிறைவேற்றப்பட்ட நில உச்ச வரம்பு சட்டங்களை அமுலாக்கி அடிப்படை சமூக பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற அக்கறை இதுகாறும் ஆட்சி பொறுப்பில் இருந்த கட்சிகளுக்கு அறவே இல்லை என்பதை இம்மாநாடு அழுத்தமாக சுட்டிக்காட்டுகிறது.

பல தலைமுறைகளாக பழங்குடி மக்கள் அனுபவத்தில் உள்ள 3 லட்சம் ஏக்கர் ,வன நிலங்களிலிருந்து உச்சநீதிமன்ற தீர்ப்பினை காரணம் காட்டி ஆதிவாசி மக்கள் மற்றும் விவசாயிகளை வெளியேற்ற மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது. பல பன்னாட்டு, உள்நாட்டு கம்பெனிகள் ஏராளமான நிலங்களை வாங்கி நவீன பண்ணைகளை உருவாக்கி வருகின்றன. இதில் பலமுறைகேடுகளும் மோசடிகளும் நிகழ்ந்து வருகின்றன. தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவே ஒதுக்கப்பட்ட சுமார் 3 லட்சம் ஏக்கர் நிலங்களில் பெரும்பகுதி நிலங்கள் அம்மக்களிட மிருந்து பறிக்கப்பட்டுள்ளன.

அனைத்துக்கும் மேலாக தமிழகத்தில் கிராமப்புறத்தில் பெரும் பகுதி மக்கள் குடிமனை இல்லாமல் - நிலமற்றவர்களாக உள்ள நிலையில், 50 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை பன்னாட்டு, உள்நாட்டு தொழில் நிறுவனங்களுக்கு தாரை வார்க்கும் தமிழக அரசின் போக்கினை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது.

கீழ்க்கண்டவைகளை நிறைவேற்ற வேண்டுமென இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

1. உச்சவரம்பு சட்டத்தில் உள்ள ஓட்டைகளையும் - விதிவிலக்குகள் அளிக்கும் ஷரத்துக்களையும் நீக்கும் வகையில் உரிய சட்டத்திருத்தம் கொண்டு வருவதுடன் - உபரி நிலங்களை கைப்பற்றி நிலமற்ற - விவசாயத் தொழிலாளர்களுக்கும் - ஏழை விவசாயிகளுக்கும் வழங்கிட வேண்டும்.
2. உபரி நிலவினியோகத்திலும், தரிசு மற்றும் வன நிலங்களை ஆக்கிரமித்து நடந்து வரும் 'நில மோசடிகள்' குறித்தும் விசாரணைக் கமிஷன் அமைத்து விசாரிக்க வேண்டும்.
3. வன நிலங்களில் சாகுபடி செய்து வரும் ஆதிவாசி மக்களையும் - விவசாயிகளையும் வெளியேற்றும் நடவடிக்கைகளை கைவிட வேண்டும். அந்நிலங்களுக்குப் பட்டா வழங்கிட வேண்டும்.
4. பஞ்சமர் நிலங்களை மீட்டு தலித் மக்களுக்கு வழங்கிட வேண்டும்.
5. 50 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை பெரும் தொழில் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கும் முயற்சிகளை கைவிட்டு - அந்நிலங்களை கிராமப்புற நிலமற்றவர்களுக்கு வழங்கி - அவர்கள் சாகுபடி துவங்கிட தேவையான உதவிகளை வழங்கிட இம்மாநாடு வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறது.

6. இக்காலத்தில் தமிழ்நாட்டில் உபரி, தரிசு, பஞ்சமர் மற்றும் வன நிலங்களை மீட்கும் நில மீட்சி போராட்டங்கள் சில மாவட்டங்களில் நடைபெற்றுள்ளன. இப்போராட்டங்களில் ஈடுபட்ட அனைத்து பகுதி மக்களுக்கும் இம்மாநாடு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, தொடர்ந்து முறையான நில விநியோகம் - தரிசு, பஞ்சமர் - வன நிலங்களை கையகப்படுத்தும் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என இம்மாநாடு தீர்மானிக்கிறது.

தீர்மானம் - 24

முறைசாரா தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கிடுக!

தமிழகத்தில் உள்ள சுமார் 2 கோடி முறைசாரா தொழிலாளர்கள் வேலைக்கு உத்தரவாதம் மற்றும் சட்டப்பாதுகாப்போ, சமூக பாதுகாப்போ இல்லாமல் உள்ளனர். உருவாக்கப்பட்ட உடல் உழைப்பு தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாட்டை அதிமுக அரசு அநேகமாக முடக்கியுள்ளது கட்டுமான தொழிலாளர் நலத்திட்ட பயன்கள் கடந்த 4 ஆண்டுகளில் தொழிலாளர்களின் எதிர்பார்ப்பிற்கேற்ப உயர்த்தப்படவில்லை. 60 வயதிற்கு மேல் பென்சன் என சட்டமன்றத்தில் 2001-ல் அறிவிக்கப்பட்டும் இதுவரை அமுலாக்கப்படவில்லை. 2004 ஜனவரி முதல், தொழிற்சங்க பிரதிநிதிகள், அரசு மற்றும் வேலையளிப்பவர் பிரதிநிதிகள் கொண்ட வாரிய புதுப்பித்தலுக்கான அரசாணை இன்னமும் வெளியிடப் படவில்லை.

எனவே, கட்டுமானம் மற்றும் முறைசாரா நல வாரியங்களின் செயல்பாடு மேம்படுத்தப்பட வேண்டும். அனைவருக்கும் பென்சன் உட்பட புதிய பணப்பயன்கள் வழங்க தமிழக அரசு முன்வர வேண்டும். முறைசாரா தொழிலாளர்களின் வேலைக்கு உத்தரவாதமளிக்கக் கூடிய கொள்கைகளை மத்திய, மாநில அரசுகள் அமலாக்க வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)-யின் 18வது தமிழ்நாடு மாநில மாநாடு வலியுறுத்துகிறது.

கல்விப் பிரச்சனைகளைக் களைந்திடுக!

நாட்டின் சுய சார்புத்தன்மைக்கு அடிப்படையானவைகளில் கல்வி முக்கியமான துறையாகும். ஆனால்: தாராளமயமாக்கல், உலகமய மாக்கல் கொள்கைகள் கல்வியை வியாபாரமயமாக்கி உள்ளதால் சமுதாயத்தில் பெரும்பான்மையினராக உள்ள உழைக்கும் மக்கள் உயர்கல்வி பெற முடியாமல் தடுக்கப்படுகின்றனர். அந்நிய பல்கலைக் கழகங்களை அனுமதித்தல், நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் என்ற பெயரால் தனியார் நிறுவனங்களின் கொள்ளையை ஊக்குவித்தல், காளான்கள் போல் சுயநிதிக்கல்வி நிலையங்களின் பெருக்கம் போன்றவைகள் மேலும், மேலும் கல்வி சீரழிய காரணங்களாகின்றன.

2002ம் ஆண்டு டி.எம்.ஏ. பாய் வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை தொடர்ந்து, தமிழக சுய நிதிக்கல்வி நிலையங்களின் கூட்டமைப்பு பல வழக்குகளை தொடுத்து இடஒதுக்கீட்டிற்கு எதிராகவும் மற்றும் சுய நிதி நிறுவனங்கள் தங்களது விருப்பத்திற்கு கட்டணங்களை தீர்மானித்துக் கொள்ளலாம் என்பதுமான தீர்ப்புகளை பெற்றுக் கொண்டு உயர் கல்வியை ஏழைகளுக்கு எட்டாதவைகளாக ஆக்கியுள்ளன. இந்த வழக்குகளில் தமிழக அரசு ஏனோதானோவென்று பார்வையாளராக இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததை இம்மாநாடு கண்டிக்கிறது. உயர்கல்வி உழைக்கும் மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் சுயநிதிக்கல்லூரிகளை அனைத்து வகைகளிலும், கட்டுப்படுத்தும் மத்திய சட்டம் ஒன்றை வருகிற பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே நிறைவேற்ற வேண்டுமென இம்மாநாடு மத்திய அரசை வற்புறுத்துகிறது.

மத்திய அரசு கடந்த பட்ஜெட்டில் கல்வி வளர்ச்சிக்கு 2 சதவீதம் சேவை வரி விதித்தது வரவேற்கக்கூடியது. மேலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதத்தை கல்விக்கு ஒதுக்கிட வகை செய்ய வேண்டுமென இம்மாநாடு மத்திய அரசை கோருகிறது. மத்திய அரசு கடந்த பட்ஜெட்டில் அறிவித்தபடி கல்விக்கடன் வழங்குவதில்

வங்கிகள் நிபந்தனைகள் விதிப்பதை உடனடியாக கைவிடச் செய்ய வேண்டும்.

தமிழகத்தில் கல்வி வியாபாரமயமாகியுள்ளதின் கோர முகத்தை கும்பகோணம் பள்ளி விபத்தில் காண முடிந்தது. 94 அரும்புகளின் உயிரிழப்பிற்கு பின்பும் கூட தமிழக அரசு கல்வித்துறையை சீரமைக்க உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதை இம்மாநாடு தமிழக மக்களுக்கு சுட்டிக் காட்டுகிறது.

தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 40,000 ஆசிரியப்பணி இடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் தாங்களே நிதியை உருவாக்கி ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்ற அரசின் வழிகாட்டல் ஆயிரக்கணக்கில் மாணவர்களிடம் நன்கொடைகள் வசூலிக்கும் நிலையை ஏற்படுத்தி கடந்த ஆண்டு பல கல்வி நிலையங்களில் மாணவர்களின் போராட்டத்திற்கு வழிவகுத்தது.

தனியார் பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் பணக் கொள்ளை பெருகி வருகிறது. 1992 ல் இயற்றப்பட்ட கட்டாய நன்கொடை தடைச் சட்டத்திற்கு உடனடியாக ஷரத்துகளை உருவாக்கி இவைகளை தடுத்திட வேண்டுமென தமிழக அரசை இம்மாநாடு வற்புறுத்துகிறது. உடனடியாக ஆசிரியர் நியமனங்களை செய்வதோடு, அரசுக்கல்லூரிகள் மற்றும் பள்ளிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், போதிய அளவு வகுப்பறைகளை உருவாக்கவும் கூடுதலான நிதியை மாநில அரசு ஒதுக்கிட வேண்டும். தனியார் பள்ளிகளின் அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு அம்சங்களில் மாநில அரசு கறாராக தலையிட்டு ஒழுங்கமைக்க வேண்டுமென இம்மாநாடு வலியுறுத்துகிறது

ЖЖЖ

ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தை வலுப்படுத்துவோம்!



இன்றைய உலகில் மிக வலுவான ஏகாதிபத்திய சக்தியாக அமெரிக்கா திகழ்கிறது. பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் உலகம் முழுவதும் அதன் மேலாதிக்கத்தை வலுப்படுத்த அமெரிக்கா முயற்சி செய்கிறது. ராணுவத்தை அனுப்பியும், பொருளாதாரத் தடை விதித்தும் மற்ற நாடுகளை மிரட்டி வருகிறது.

இராக்கில் மட்டுமின்றி ஈரான், கொரிய ஜனநாயகக் குடியரசு ஆகியவற்றுக்கு எதிராகவும் போர் அச்சுறுத்தல் விடுத்து அமெரிக்கா மிரட்டி வருகிறது. கியூபாவுக்கு எதிரான தடையை மேலும் இறுக்கி வருகிறது. வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் நம் நாட்டின் ராணுவத்திலும் அமெரிக்கா ஊடுருவ முடிந்தது.

தற்போது நேபாள மன்னர் அங்கு அவசர நிலையைப் பிரகடனப் படுத்தி, அங்குள்ள அரசியல் தலைவர்களை வீட்டுச்சிறையில் அடைத்து வைத்திருக்கிறார். அங்கு மாவோயிஸ்டு தீவிரவாதிகளுக்கு எதிராகப் போராடுவதற்கு உதவுவதாக கூறி அமெரிக்கா ஆயுதம் வழங்கி வருகிறது.

நம் நாட்டைச் சுற்றிலும் உள்ள அண்டை நாடுகளான பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை ஆகிய நாடுகளில் தலையிட்டு ராணுவ உதவி செய்வது என்ற பெயரால் அச்சுறுத்தல் ஏற்படுத்தி வருகிறது. இந்த நாடுகளில் என்ன நடந்தாலும் அது நம்மை பாதிக்கும். எனவே மக்களைத் திரட்டாமல் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நாம் வெற்றி பெற முடியாது. நமது தேச ஒற்றுமை, இறையாண்மை, சுதந்திரத்தைப் பாதுகாக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராட வேண்டும்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் நிலைத்தன்மை என்பது இடதுசாரிக் கட்சிகளை மட்டும் சார்ந்ததல்ல. இது இடதுசாரிகளின் தோளில் மட்டும் சுமத்தப்படவில்லை. குறைந்தபட்ச பொதுத்திட்டத்தில் உள்ள, மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் அம்சங்களை அவர்கள் அமுல்படுத்துவதிலும், கூட்டணி கட்சிகளின் ஒற்றுமையைப் பாதுகாப்பதையும் பொருத்துதான் இந்த அரசின் நிலைத்தன்மை இருக்கிறது.

தொலைத் தொடர்புத் துறையில் நேரடி வெளிநாட்டு மூலதனத்தை 74 சதவீதமாக அதிகரிப்பது என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது. பொருளாதாரப் பிரச்சனைகள் சம்பந்தமாக இரண்டு குறிப்புகளை மத்திய அரசிடம் வழங்கியிருந்தும் அவர்கள் இந்த முடிவை

எடுத்திருக்கின்றனர். தொலைத் தொடர்புத்துறை நாட்டின் பாதுகாப்பு சார்ந்த கேந்திரமான துறை ஆகும். பல நாடுகளில் இந்தத் துறை வெளிநாடுகளுக்குத் திறந்துவிடப் படுவதில்லை. நமது நாட்டின் உளவுத்துறையும், தொலைத் தொடர்புத்துறையில் வெளிநாட்டு மூலதனத்தை அனுமதிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. அதை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

முந்தைய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, தேசத்தின் இறை யாண்மையைப் பற்றிக் கவலைப்படாமல் செயல்பட்டது. அதே போல் இந்த அரசும் காப்புரிமை சட்டத்தில் அவசர சட்டம் மூலமாகத் திருத்தம் கொண்டு வந்துள்ளது. இது நம் நாட்டின் நலனுக்குக் கேடு விளைவிக்கக் கூடியது.

வெளிநாட்டு தனியார் வங்கிகள், நம் நாட்டு தனியார் வங்கிகளில் 74 சதவீதம் வரை முதலீடு செய்யலாம் என்றும் அரசு முடிவு செய்துள் ளது. நமது பொருளாதாரத் துறையில் குறிப்பாக தென்னிந்தியாவில் சில தனியார் வங்கிகள், உள்ளூர் அளவில் சேவை செய்து வருகின்றன. இவற்றை வெளிநாட்டு வங்கிகள் கபளீகரம் செய்யும் நிலையை ஏற்படுத்தும்.

மத்திய அரசு இதே திசைவழியில் பயணித்தால் அரசியல் பின்விளைவைச் சந்திக்க நேரிடும் வகுப்புவாத பாஜகவின் வளர்ச்சியைத் தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் மத்திய அரசை ஆதரிக்கிறோம். ஆனால் இது ஒருவழிப் பாதையல்ல. இந்த அரசு முந்தைய பாரதிய ஜனதா அரசின் கொள்கைகளைத் தொடரக் கூடாது என்பதே எங்கள் நிலை.

வகுப்புவாத சக்திகளைத் தனிமைப்படுத்தவும், குறைந்தபட்சப் பொதுத்திட்டத்தை அமுல்படுத்தவும், இடதுசாரி ஜனநாயக சக்தி களை வலுப்படுத்தவும் மார்க்சிஸ்ட் கட்சி வலுவான மக்கள் போராட்டங்கள்ள நடத்தும்.

தலித் மக்களுக்கு இரட்டை வாக்குரிமை என்பது ஜனநாயக ரீதியான் கோரிக்கை அல்ல. தலித் கட்சிகள் திட்ட மிட்டு கம்யூனிஸ்ட் எதிர்ப்பு நிலையில் செயல்படுகின்றன. தலித் மக்களின் உண்மையான பிரச்சனைகளுக்கு தவறான் வழிகாட்டும் கொள்கைகளை அவர்கள் முன்வைக்கிறார்கள். அந்த மக்களை விரிவான ஜனநாயக இயக்கத்தில் கொண்டு வரும் வகையில் நாம் தொடர்ந்து செயல்பட வேண்டும்.

தனியார் துறையில் தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்கு இட ஒதுக்கீடு என்பதை மார்க்சிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது. அதை விரிவான அரசியல் கருத்தொற்றுமை மூலம் அமல்படுத்த வேண்டும் என்று கருதுகிறோம்.

(நாகர்கோவில் மாநாட்டில் மார்க்சிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் பிரகாஷ்காரத் ஆற்றிய உரையிலிருந்து.)

சோசலிச பதாகையை உயர்த்திப் பிடிப்போம்!



சுனாமி கோடானுகோடி ஆன்மீகவாதிகளை உலுக்கிவிட்டுள்ளது. அவர்களே பதில் சொல்ல முடியாத ஒரு கேள்வி எழுந்துள்ளது. உலக அளவில் சர்ச்சை நடந்து வருகிறது. அந்த கேள்வி என்ன? இந்த உலகில் நடக்கும் அனைத்தையும் உருவாக்கக்கூடிய ஒரு தெய்வீக சக்தி இருப்பது உண்மையானால் அது கடந்த டிசம்பர் 26ம் தேதி என்ன செய்து கொண்டிருந்தது? அப்பாவி குழந்தைகள் உள்பட 2 லட்சம் பேரைக் கொன்று குவிப்பதை அந்த தெய்வீக சக்தி ஏன் தடுக்க முயலவில்லை? அப்படியானால் கடவுள் நம்பிக்கை என்பது வெறும் பிரமைதானா? என்ற கேள்வியை மார்க்சிஸ்ட்டுகள் அல்ல, ஹிந்து பத்திரிகை யில் ஒரு கட்டுரையாளர் எழுப்பி இருக்கிறார்.

இந்த உலக அளவிலான சர்ச்சையில் பெரும் மதகுருக்கள் கூட ஈடுபட்டுள்ளனர். கிறிஸ்தவப் பள்ளிகளின் தலைமை குரு ரோவன் வில்லியம்ஸ் என்பவர் கூட, இவ்வளவு துயரங்களுக்கு மக்களை ஆளாக்குவதை அனுமதித்த ஒரு கடவுளை நாம் எப்படி நம்புவது? இது உலகெங்கிலும் பரவலாக எழுந்துள்ள கேள்வியாகும்என்று கூறுகிறார். பிரிட்டன் யூத சமூகத்தின் தலைவர் ஜோனாத்தம் சாக்ஸ் என்பவர், சுனாமி கோர நிகழ்வை கடவுள் எப்படி அனுமதித்தார்? ஆத்திகர்கள்தான் இந்த கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும் என்று அந்த யூதர்களின் தலைவர் கூறுகிறார்.

இந்த நிலையில் பொருள்முதல்வாத பிரச்சாரத்திற்கு வாய்ப்பான நிலைமை தமிழகத்தில் உருவாகியுள்ளது. அதைப் பயன்படுத்துவது தமிழகத்தில் மிகவும் அவசியமும், அவசரமும் ஆகும்.

சங்கராச்சாரியார் மீதான கொலைக் குற்றத்தை புலனாய்வு செய்த போலீஸ் கண்காணிப்பாளர், தான் தயார் செய்த குற்றப்பத்திரிகையை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்பாக, வரதராஜ பெருமாள் சிலையின் காலடிகளில் வைத்து பூஜை செய்தார். அந்த சிலை நீதி வழங்குமென்றால் இந்திய குற்றவியல் சட்டம் எதற்கு? புலனாய்வுத் துறை எதற்கு? அந்த காவல்துறை அதிகாரியே எதற்கு? ஒரு நீதிபதி எதற்கு?

ஒருகாலத்தில் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கு பெயர்போனது தமிழகம். இன்று ஜெயலலிதா ஆட்சியில் நாடே சந்திசிரிக்கிறது. பகுத்தறிவு பதாகையை திராவிட இயக்கத்தினர் இன்று கீழே போட்டு விட்டனர். அந்த வெற்றிடத்தில் விஞ்ஞான சோஷலிச பிரச்சாரப் பதாகையை மார்க்சிஸ்ட் கட்சிதான் உயர்த்திப் பிடித்து பீடு நடை போட்டு முன்னேறிச் செல்ல வேண்டும்.

(மாநாட்டில் மார்க்சிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ஆர்.உமாநாத் ஆற்றிய உரையிலிருந்து.)

சாதி, மத அரசியலுக்கெதிரான கருத்துப் போராட்டத்தின் தேவை!



அகில இந்திய அரசியலில் மிகப் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் மதவெறி பாஜக கூட்டணி படுதோல்வி அடைந்துள்ளது. மக்களுக்கு எதிரான பொருளாதாரக் கொள்கைகளை அது பின்பற்றிய காரணத்தாலும், மதவெறி நோக்குடன் மக்களைப் பிளவுபடுத்தி, தேசத்தை நாசப்படுத்த முயன்றதாலும் பாஜக கூட்டணி மக்களால் நிராகரிக்கப்பட்டது. இந்த மாற்றத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மகத்தான பங்குண்டு.

தமிழ்நாட்டில் மக்கள் பிரச்சனைகளை முன்வைத்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எண்ணற்ற இயக்கங்களை நடத்தி வருகின்றது. இதன்மூலம் மக்களிடம் கட்சிக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. கட்சியின் செல்வாக்கு நாளுக்கு நாள் பெருகி வருகிறது.

சுனாமி பேரழிவுத் தாக்குதல் பிரச்சனையிலும், சங்கராச்சாரியார் கைது செய்யப்பட்ட பிரச்சனையிலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தடுமாற்றமின்றி தெளிவான நிலை எடுத்தது, மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

தற்போது இளைஞர்கள், மாணவர்கள், பெண்கள் என புதிய தலைமுறையினர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அதிக அளவில் வந்துள்ளனர்.

தொடர்ச்சியான அரசியல் போராட்டம், தொழிலாளர், விவசாயிகள் போராட்டங்கள், வெகுஜன அமைப்புகளின் நடவடிக்கைகள், பலமான ஸ்தல இயக்கங்களின் மூலமாக ஏராளமானவர்கள் மார்க்சிஸ்ட் கட்சியின் மீது நம்பிக்கை வைத்து வருகின்றனர்.

அகில இந்திய அளவிலும், தமிழகத்திலும் ஜாதி, மத, மொழி வெறி செயல்படும் சூழ்நிலையில் இதை எதிர்த்து கருத்துப் பிரச்சாரம் செய்து வருகிறது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி.

சமூக மாற்றத்திற்காக தொடர்ந்து கருத்துப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

(நாகர்கோவிலில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டில் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் பி.ராமச்சந்திரன் ஆற்றிய உரையிலிருந்து)

வைகை வெளியீடு, மதுரை-18

விலை ரூ. 3

Vaigai Printers & Publishers, Madurai-625 018. Ph: 0452-2667450

சுரண்டலற்ற இந்தியாவை உருவாக்குவோம்!



தமிழ்நாட்டில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் எண்ணிக்கையில் மட்டுமல்லாது, உழைப்பாளிகள், விவசாயிகள், மாணவர்கள், குறிப்பாக பெண்கள் இயக்கங்களைக் கட்டுவதிலும், அவர்களது பிரச்சனைகளை முன்வைத்து போராடுவதிலும் பன்முக நடவடிக்கையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இந்தியாவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி புறக்கணிக்க முடியாத சக்தியாக உயர்ந்துள்ளது. அரசியல் சூழ்நிலைகளில் தீர்மானகரமாக தலையிடும் சக்தியாக வளர்ந்துள்ளது. பாரதிய ஜனதா கட்சி ஆட்சியை முறியடிப்பதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரின் கடுமையான உழைப்பு முக்கிய சக்தியாக திகழ்ந்தது.

தற்போது நாட்டின் அரசியல் நிலைமை மாறியுள்ளது. முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு மார்க்சிஸ்ட் கட்சியின் தலையீடு பல்வேறு பிரிவினரிடையே வரவேற்கப்படுகிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட இடதுசாரி கட்சிகளை சார்ந்துதான் மத்திய அரசு உள்ளது என்ற நிலை ஏற்பட்டுள்ளது. அரசில் பங்கேற்காவிட்டாலும், இந்த அரசு எந்தெந்த பிரச்சனைகளில் எப்படி செயல்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டுகிறோம். அதற்கு மத்திய ஆட்சியாளர்கள் செவிசாய்த்தால் நல்லது. செவி சாய்க்காமல் போவார்களேயானால், நீங்கள் உங்கள் பாதையில் போங்கள், நாங்கள் எங்கள் பாதையில் போகிறோம் என்று சொல்ல வேண்டிவரும். எங்கள் பாதை போராட்டப் பாதை, மக்கள் நலனுக்கான போராட்டப் பாதையில் செல்வோம். மத்திய ஆட்சியாளர்களுடன் ஒன்றாக சேர்ந்து பணியாற்ற வேண்டியிருந்தாலும், மக்கள் பிரச்சினைகளில் அங்குலம், அங்குலமாகப் போராட வேண்டியுள்ளது.

குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள மக்களுக்குச் சாதகமான அம்சங்களை நிறைவேற்றுமாறு கூறினால், அதை செயல்படுத்த மறுக்கிறார்கள், அதற்காகப் போராட வேண்டியுள்ளது. மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று அவர்களிடம் சொல்கிறோம். அதை அவர்கள் மதிக்காவிட்டால் எங்கள் போராட்டப் பாதைக்குத் திரும்பி விடுவோம் என்று எச்சரிக்கிறோம்.

புதிய சுரண்டலற்ற இந்தியாவை உருவாக்க, எல்லோருக்கும் சமூக நீதியும், சம நீதியும் கிடைப்பதற்கான போராட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து நடத்தி வருகிறது. தமிழக மக்களும் இந்தப் போராட்டத்தில் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும்.

(நாகர்கோவிலில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டில் அகில இந்திய பொதுச் செயலாளர் **ஹர்கிஷன்சிங் சுர்ஜித்** *ஆற்றிய உரையிலிருந்து)*


இந்திய கம்யூனிஸ்ட் கட்சி [மார்க்சிஸ்ட்]
தமிழ்நாடு மாநில 18 வது மாநாடு